6 வார, வீட்டுப்பாடமற்ற வேத பாடம்

10 இலட்சத்திற்கும் மேலான பிரதிகள் விற்பனையில்

# பயத்தின் சங்கிலியை உடைத்தெறிதல்



கே. ஆர்தர்

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

40 நிமிட வேத பாடம்

40 நிமிட
வேத பாடம்

# பயத்தின் சங்கிலியை உடைத்தெறிதல்

பிரீசெப்ட்
மினிஸ்ட்ரீஸ்
சொசைட்டி
ஆப் இந்தியா

கே. ஆர்தர்

**BREAKING FREE FROM FEAR (TAMIL)**

PUBLISHED BY

**PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA**

P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.

Tel.No- +91-22-65333302

E-mail - preceptindia@rediffmail.com

Website: www.preceptindia.org

Translator : Ps. P. Kanagarathinam

WITH PERMISSSION FROM

WATER BROOK PRESS

12265 Oracle Boulevard, Suite 200

Colorado Springs, Colorado 80921

ISBN 978-0-307-45756-1

Copyright © 2001 by Precept Ministries International

*All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying and recording, or by any information storage and retrieval system, without the written permission of the publisher.*

Printed in India

May, 2017

Printed by :

Ebenezar Printing House

No. 205, Hind Service Industrial Premises

V.S. Marg, Near Shivaji Park, Sea-Face

Dadar West, Mumbai - 400 028.

Tel : 022 - 2446 2632

Email : outworkeph@gmail.com

# பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா

மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுதல்

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா
என்பது பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனலின் ஒரு அங்கமாகும்.
வேதாகமத்தை ஆழமாக கற்பதின் மூலம் மக்களை தேவனின் வார்த்தையில்
நிலைநாட்டுவதில் இது ஈடுபட்டுள்ளது.

## குறிக்கோள்

மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டுவது.

## தரிசனம்

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மக்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் மாதிரிகளாகவும், வேதாகமத்தை ஆழமாக கற்பவர்களாகவும், வேதாகமக் கண்ணோட்டத்தில் உலகத்தை நோக்குகிறவர்களாகவும், திருச்சபைக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களாகவும் வாழுதல்.

**Contact us**
for more information about Inductive Bible Studies in your area:

**PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA**
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.
Tel.No- +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

# பொருளடக்கம்

இந்த வேதபாடத்தை பயன்படுத்துவது எப்படி? ........................................V

**அறிமுகம் :** பயத்தின் சங்கிலியை உடைத்தெறிதல்.................................. 1

**முதல் வாரம் :** நாம் ஏன் பயப்படுகிறோம்?................................................3

**இரண்டாவது வாரம் :** தேவன் நம்பிக்கைக்கு உரியவரா?.......................11

**மூன்றாவது வாரம் :** கர்த்தருக்குப் பயப்படும் பயம்................................ 21

**நான்காவது வாரம் :** மனிதனுக்கு பயப்படும் பயத்தை மேற்கொள்ளுதல்...35

**ஐந்தாவது வாரம் :** மரண பயத்தை வெற்றிகொள்ளுதல்........................61

**ஆறாவது வாரம் :** பயமின்றி வாழ்தல்....................................................81

## இந்த வேதபாடத்தை பயன்படுத்துவது எப்படி?

வேதம் கூறுவதை சுயமாகக் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள ஆனால் ஒன்றுகூடிவர மிகவும் குறைவான நேரமே உள்ள மக்களுக்கு இந்த சிறு-குழு கற்றல் முறை மிகவும் ஏற்றது. உதாரணத்திற்கு, வேலையில் மதிய உணவு இடைவெளியில் கூடும் குழுக்கள், அதிகாலைநேர ஆண்கள் கூடுகை, பெண்கள் வீட்டு ஜெபக்குழு கூடுகை, ஞாயிறுபள்ளி வகுப்பு, மற்றும் குடும்ப தியானவேளையில் பயன்படுத்த இது ஏற்றது. (மேலும் நீண்ட நேரம் செலவிடும் சிறு குழுக்களுக்கும் – அதாவது மாலைநேர குழுக்கள், சனிக்கிழமை குழுக்கள் – ஜெபிக்கவும், ஐக்கியத்திற்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு, வேத பாடத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் குழுக்களுக்கும் இந்தமுறைமை ஏற்றது)

குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் கூடிவரும்போதே ஒவ்வொரு பாடத்தினுடைய கற்றல் செயல்முறைகளையும் ஒரேநேரத்தில் முடிக்கும்படி இந்தப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு குழுவாக கற்கும் முறையாக இருந்தாலும், கற்கவும் கலந்துரையாடலை நடத்திச்செல்லவும், உங்களை வழிநடத்த ஒரு உதவியாளர் தேவைப்படுகிறார். (இவரின் செயல்பாடு விரிவுரையாற்றுவதோ, போதிப்பதோ அல்ல. எனினும், இந்த புத்தகம் ஞாயிறு பள்ளி வகுப்பு மற்றும் அதைப்போல் செயல்படும் குழுக்களில் பயன்படுத்தப்படும்போது, போதிப்பவர் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வார பாடத்தோடு தன் உட்கருத்துக்களையும் நேரடியாகப் போதிக்கலாம்.

நீங்கள், உங்கள் குழுவின் உதவியாளராக, தலைவராக இருப்பின், உங்கள் வேலையை எளிதாக்க உதவிடும் குறிப்புகள்:

- நீங்கள் உங்கள் குழுவை நடத்தும் முன்பதாக பாடத்தை வாசித்து அதில் அடையாளமிடவும். இது பாடத்துடன் நன்கு அறிமுகமாக்கிக்கொள்ள உதவுவதோடு, மிக எளிமையாக குழுவை நடத்த உதவும். புத்தகத்தில் சொல்லப்பட்டபடி அடையாளக் குறியீடுகளை இடுவது குழுவை நடத்திச்செல்ல எளிதாக்கும். நீங்கள் குழுத்தலைவராயின் ஒவ்வொரு குறியீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை தேர்ந்தேடுக்கவும்.
- நீங்கள் குழுவை நடத்தும்போது, பாடப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தே அதிலுள்ளதை சத்தமாக வாசியுங்கள். பாடத்தின் முன்பு அல்லது பின்பு அல்லது இடையில் வரும் "உட்கருத்துக்களையும்" (Insight Box) பாடத்துடன் சேர்த்து வாசியுங்கள். நீங்கள் இணைந்து உற்றுநோக்கி, கற்றுக்கொண்டதை கலந்துரையாடுங்கள். வேத வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, குழுவினர் அடையாளமிடும் வார்த்தையை சத்தமாக சொல்லச்சொல்லுங்கள்.

● கலந்துரையாடல் கேள்விகள் முழு பாடத்தையும் படித்து முடிப்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. வகுப்பு கலந்துரையாடலுக்குள் கடந்து செல்லும்போது, அநேக வேளைகளில், அவர்களே கேள்விகளை புரிந்துகொண்டு கலந்துரையாடுவார்கள். நினைவில் கொள்ளுங்கள், கலந்துரையாடல் கேள்விகள் குழுவை தலைப்பை நோக்கி நடத்திச்செல்லவே கேட்கப்படுகிறது, கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவர அல்ல.

● ஒவ்வொருவரும் தங்கள் பதில்களையும், கண்டுபிடிப்புகளையும் வாய்மொழியாக சொல்வது முக்கியமானது என்று நினைவில்கொள்ளுங்கள். இது ஒவ்வொரு வார பாடத்திட்டத்தில் அவர்களின் தனிப்பட்ட புரிந்துகொள்ளுதலை மிகவும் வலிமையாக்குகிறது. ஒவ்வொரு வார பாடத்தின் கலந்துரையாடலிலும் ஒவ்வொருவரும் பங்குபெறும்படி போதுமான அளவு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

● கலந்துரையாடல் நகர்ந்து செல்லட்டும், கற்கும்போது அவசியமான இடங்களில் சற்று நேரம் அதிகமாக செலவழிக்கலாம் என்பதே இதன் பொருள். தேவைப்பட்டால், பாடத்தை ஒரு கூட்டத்தொடருக்கும் மேலாக தொடர்ந்து எடுத்துக்கொண்டு செல்லலாம். எனினும், செல்லும் வேக அளவை மிகவும் குறைத்துவிட வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் உற்சாகம் குறைவதால் மக்கள் விட்டுவிடுகின்ற பகுதியில் நேரம் செலவிடப்படுவதைவிட, குழுவினர் எல்லாரும் "அதிகமாக விரும்பும்" பகுதிக்கு கொண்டுசெல்வதே நல்லது.

● சில பதில்கள் தகுதியானதும், சரியானதும் என்பது கேள்விக்குரியதாயிருப்பின், நீங்கள் மென்மையாகவும் மகிழ்ச்சியுடனும் குழுவினருக்கு வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கு நேராகவே கவனம் இருக்கும்படி நினைவுபடுத்துங்கள். உங்கள் முக்கிய நோக்கம் வேதம் என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்வதே, மனித தத்துவங்களோடு ஒன்றிப்போவது அல்ல. உண்மையில் வேத வாக்கியங்களை வாசித்து, ஒவ்வொருவருக்கும் அவருடைய பதிலை காட்டும்படி தேவனைக் கேளுங்கள்.

# பயத்தின் சங்கிலியை உடைத்தெறிதல்

வாழ்க்கையானது எல்லாவித பயங்களும் நிறைந்ததாக இருக்கின்றதல்லவா? தீவிரவாதத்தைக்குறித்த பயங்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகுறித்த பயங்கள், பொருளாதாரத்தைக்குறித்த பயங்கள், நமக்கு அன்பானவர்களின் பாதுகாப்புகுறித்த பயங்கள், உயிருக்கு ஆபத்தான நோயிருக்குமோ என்ற பயங்கள். இன்னும் வேலையை இழந்துவிடுவோமோ, வீட்டை இழந்துவிடுவோமோ, நல்ல உறவு முறிந்துவிடுமோ, நம்முடைய சேமிப்பு குறைந்துவிடுமோ, நம் கனவுகள் தகர்ந்துவிடுமோ, நமது சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடுமோ, நம் உடல்நலம் பாதிக்கப்பட்டுவிடுமோ, நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்குமோ என்கிற பயங்கள். இப்படியாக பயப்படுவதற்கான பல காரணங்களை நாம் கண்டுபிடிக்கலாம்.

இன்றைய நாட்களிலே அவ்வப்போது கிடைக்கும் உடனடிச் செய்திகளில், தற்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பேரழிவுகள், இயற்கைச் சீற்றங்கள், உலகத்தை கலங்கச் செய்யும் பரிதாப நிகழ்வுகளை நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருக்கின்றோம். சுருங்கிக்கொண்டிருக்கும் உலகத்தில், ஒவ்வொரு பேராபத்தும் நம்மை நோக்கி வேக வேகமாக நெருங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

இந்த பயத்தின் பிடியிலிருந்தும், இதன் விளைவாக நம்முடைய சரீரம், உணர்ச்சி, சிந்தனையில் உண்டாகும் அழுத்தத்தின் சுமையிலிருந்தும் நம்மை நாமே விடுவித்துக்கொள்வது எவ்வாறு? இந்த வேத பாடத்தில் இதற்கான பதிலை நீங்கள் கண்டுகொள்ளுவீர்கள். இந்த பதிலானது உங்கள் வாழ்க்கையில் பயத்தை ஏற்படுத்தும் எத்தகைய சூழ்நிலையிலும் விசுவாசத்தோடும் விடுதலையோடும் தொடர்ந்து முன்செல்ல உதவும்.

எத்தகைய சோதனைகளும் நம்மை மேற்கொள்ளவிடாமல், நாம் அதை மேற்கொள்வதற்கான பெலத்தைத் தருவதாக தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார் (1 கொரிந்தியர்: 10:13). ஆகையால் சோதனையிலிருந்து தப்பிடுவதற்கான வழி ஒன்றை வைத்திருக்கிறார், அதை நீங்களாகவே விசுவாசத்தோடு கண்டுபிடிக்கும்போது, அதற்கேற்றாற்போல உங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளும்போது பயத்தின் கட்டிலிருந்து உங்களை நீங்களே விடுவித்துக்கொள்ள முடியும் என்பதைக் காண்பீர்கள்.

இந்த வேதபாடத்தை ஆரம்பிக்கிற இந்த நேரத்தில் நீங்கள் ஏன் பின்வருமாறு ஜெபத்தைச் செய்யக்கூடாது? "ஆண்டவரே! உம்முடைய வேதவசனத்திலிருந்து நீர் என்ன பேசுகிறீர் என்பதை நாங்கள் கேட்டறிய எங்களுக்கு உதவி செய்தருளும், ஆமென்!"

# வாரம் ஒன்று

பயம் நம்முடைய உடலையும் சிந்தனையையும் சிதைத்துவிடும், செயலிழக்கச் செய்துவிடும், குழப்பத்தை உண்டுபண்ணிவிடும். பயம் உங்களை நெருங்கும்போது நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியம், இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்துக்கேட்ட கேள்வியான: “நீங்கள் ஏன் பயப்பட்டீர்கள்?” என்று கேட்பதுதான், இந்தக் கேள்வி நாம் நம்முடைய வேத பாடத்தைத் தொடங்குவதற்குச் சிறந்த இடமாக இருக்கிறது.

## உற்றுநோக்கு

இந்தக் கேள்வியைக் கேட்பதற்குத் தூண்டின சூழ்நிலையை நாம் பார்க்கலாம். லூக்கா எழுதின நற்செய்தி நூலின் காலத்தொகுப்பின்படி பார்க்கும்போது, இது இயேசு கிறிஸ்து மக்கள் மத்தியில் செய்த ஊழியத்தின் இரண்டாவது ஆண்டின் இறுதியில் நடந்ததாக நாம் அறியலாம். இந்தக் காலத்தில் இயேசு செய்த அனைத்து அற்புதங்களான, நோயுற்றோரை குணமாக்குவதிலிருந்து மரித்தவர்களை உயிரோடு எழுப்பியது, ஐந்து அப்பம் சில மீன்களைக்கொண்டு திரள்கூட்ட மக்களுக்கு உணவு அளித்ததுவரை சீஷர்கள் தங்கள் கண்ணாரக் கண்டிருந்தனர்.

**தலைவர் :**மாற்கு 4:35-41 வசனங்களைச் சத்தமாக வாசியுங்கள். குழுவினரும் உங்களுடன் சத்தமாக சொல்லிக்கொண்டே...

- ‘**சீஷர்கள்**’, மற்றும் அவர்களைக் குறிக்கும் அவர்களை, அவர்கள், நாங்கள், உங்களுக்கு ஒருவரோடொருவர், ஆகிய வார்த்தைகளை அடிக்கோடிடவும்.
- ‘**இயேசு**’ மற்றும் அவரைக் குறிக்கும் அவர், அவரை, அவரோடே, போதகரே போன்ற வார்த்தைகளை சிலுவை அடையாளத்தால் ✝ குறிக்கவும்.
- ‘**பயம்**’ என்ற வார்த்தையைச்சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.

### மாற்கு 4:35-41

*35. அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.*

*36. அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது.*

37. அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.

38. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்.

39. அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

40. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார்.

நீங்கள் வேதபகுதியை வாசிக்கும்போது குழுவினர் முக்கியமான வார்த்தைகளைச் சத்தமாகச் சொல்லிக்கொண்டே குறிப்பிடுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இப்படிச் செய்வதினாலே ஒவ்வொருவரும் தாங்கள் குறிப்பிடும் வார்த்தை சரியாக இருப்பதை உறுதி செய்துகொண்டு, அந்த வார்த்தையைக் குறிக்கும் பிற சொற்கள், அல்லது சொற்றொடர்களை அவர்களால் குறிக்க முடியும் இதே முறையை இந்த வேதபாடம் முழுவதிலும் பின்பற்றவும்.

## கலந்துரையாடு

- சீஷர்களின் அனுபவம் என்னவாக இருந்தது? என்ன நடக்கும் என்று சீர்கள் நினைத்தார்கள்?

- இயேசு எங்கே இருந்தார்? என்ன செய்தார்? என்ன நடந்தது என்பதை விளக்குங்கள்.

- தற்போது நீங்கள் வாசித்ததிலிருந்து சீஷர்கள் வெளிப்படுத்தின உணர்ச்சிகள் இயல்பானதா? - அந்தச் சூழ்நிலையில் இயற்கையாக வெளிப்படுத்தக்கூடிய உணர்ச்சியாக இருக்கும் என்று நீங்கள் விளக்க முடியுமா? உங்கள் பதிலை விளக்கவும்.

- “நீங்கள் ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று?” என்று இயேசு சீஷர்களிடம் கேட்கும்போது எதைக் குறிப்பிட்டு உணர்த்தினார்?

41. அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

- இந்தப் புயல்காற்றின் கொந்தளிப்பான சூழலில் அவர்கள் எவ்விதமாக நடந்திருக்க வேண்டும்? ஏன்?

- இரண்டு முறை "பயம்" என்ற சொல் வருவதைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? அல்லது இன்னொருவிதமாகக் கேட்பதென்றால் வசனம் 41-ல் குறிப்பிட்டுள்ளபடி சீஷர்கள் ஏன் "மிகவும் பயந்தார்கள்?"

- எது மிகப்பெரிய பயமாக இருக்க வேண்டும்? நாம் புயல்காற்றின் கொந்தளிப்பினால் மடிந்துபோவதைக் குறித்த பயமா? அல்லது புயல் காற்றின் மீது அதிகாரம் கொண்ட ஒருவரிடத்திலா? ஏன்?

- இப்போது, நீங்கள் அல்லது உங்களுக்கு அறிமுகமான மற்ற கிறிஸ்தவர்கள் எவ்விதமான பயங்களை எதிர்கொள்ளுகிறீர்கள்?

- இப்போது நீங்கள் வாசித்ததிலிருந்து, இந்தப் பயங்களைச் சரியான முறையிலே எதிர்கொள்வதற்கான அணுகுமுறை என்ன?

## மத்தேயு 14:24-33

24. அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க் காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது.

25. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

26. அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

27. உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.

28. பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.

## உற்றுநோக்கு

கலிலேயாக் கடலில் இன்னுமொரு கட்டுக்கடங்காத இரவைக் குறித்துப் பார்க்கலாம், நமக்கு 'ஏன்' பயம் வந்தது அதன் மூலம் என்ன கற்றுக்கொள்ள முடியும் என்பதையும் பார்ப்போம். இயேசு கடலின் அருகாமையில் இருக்கும் மலையிலே தனிமையாக ஜெபிப்பதற்காகத் தம்முடைய சீஷர்களை படகில் முன்பதாகச் செல்லும்படி அனுப்பிவிட்டார்.

**தலைவர் :** மத்தேயு 14:24-33 வசனங்களைச் சத்தமாக வாசியுங்கள். குழுவினரும்...

- '**இயேசு**' மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.
- '**பேதுரு**' மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.
- '**பயம்**' மற்றும் அதைக் குறிக்கும் கலக்கம் என்ற சொற்களைச் சுற்றி வளைந்து நெளிந்து கோடுகளை வரையவும்.

## கலந்துரையாடு

- இந்தப் பொதுவான சூழ்நிலையை விவரியுங்கள்.

- பயம், கலக்கம் என்று வருமிடங்களில், அது என்ன காரணத்தால் வந்தது, மற்றும் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

- இயேசுவுக்கும் பேதுருவுக்கும் என்ன நடந்தது?

- பேதுரு தன்னுடைய பயத்தை கையாண்ட விதத்திலிருந்து ஏதாவது கற்றுக்கொள்ள முடியுமா?

- இயேசு என்று குறியிட்ட இடங்களைப் பாருங்கள். பயம் உங்களைக் தாக்கும்போதும், நீங்கள் பயம் அல்லது கலக்கமடையும் போதும், இயேசுவிடமிருந்து உதவி அல்லது இயேசுவால் உதவி செய்ய முடியும் என்பதைப்பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? இயேசு என்ன செய்தார், என்ன சொன்னார்? எவ்வாறு பேதுருவின் பயத்தைப் போக்கினார்?

- "திடன் கொள்ளுங்கள்," (வசனம்.27) இதன் பொருள் என்னவென்று நினைக்கிறீர்கள்? ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இது பார்ப்பதற்கு எவ்விதமாக இருக்கிறது?

29. அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவைவிட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான்.

30. காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்து போகையில்: ஆண்டவரே என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.

31. உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்? என்றார்.

32. அவர்கள் படவில் ஏறினவுடனே, காற்று அமர்ந்தது.

33. அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து; மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்.

## சங்கீதம் 56:1-4, 8-13

1. தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான, நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.

2. என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப் பார்க்கிறார்கள்; உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்.

3. நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.

4. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?

8. என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

## உற்றுநோக்கு

இஸ்ரவேலின் அடுத்த அரசனாக சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதுக்கு வாழ்க்கை என்பது எளிதாக இருக்கவில்லை. பொறாமையினால் நிறைந்த அரசன் சவுல், தாவீதைக் கொல்வதற்கு விரும்பினான். அவன் கையிலிருந்து தப்புவதற்கு தாவீது முயற்சிக்கையில் பெலிஸ்தியர்களால் காத் எனுமிடத்தில் சிறைப்பிடிக்கப்பட்டான். இக்கட்டான இந்த வேளையில் தாவீது 56-வது சங்கீதத்தை எழுதினான். அவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ளப்போகிறோம் என்பதைப் பார்ப்போம்.

**தலைவர் :**சங்கீதம் 56:1-4, 8-13 வசனங்களைச் சத்தமாக வாசியுங்கள். குழுவினரும் ...

- **'தாவீது'**, மற்றும் அவரைக் குறிக்கும் நான், என், எனக்கு, என்னை போன்ற வார்த்தைகளை அடிக்கோடிடவும்.

- **'தேவன்'**, மற்றும் அவரைக் குறிக்கும் வார்த்தைகளை முக்கோணக் குறியிடவும்.



- **'பயம்'**, என்கிற அர்த்தமுள்ள வார்த்தையைச் சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.

## கலந்துரையாடு

- முதலில் தாவீதின் சூழ்நிலையைக் குறித்துக் கலந்துரையாடி உண்மைகளைக் கண்டறியுங்கள். தாவீது எப்படிப்பட்ட பிரச்சனையைச் சந்தித்தான்? அவன் எப்படி உணர்ந்தான்? இந்தச் சூழ்நிலைபற்றிய எந்த ஒரு கருத்தையும் குறிப்பிட மறவாதீர்கள்.

- இப்போது தாவீது இந்தச் சூழ்நிலையை எவ்வாறு கையாண்டான்? (தேவன் தாவீதை அடுத்த இராஜாவாக அபிஷேகம் பண்ணினார் என்பதை அறிந்திருந்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்). என்ன காரணம், என்ன சிந்தனை அவனுடைய பதிலை வடிவமைத்தது?

- உங்களுக்கு பயம் ஏற்படும் சமயங்களில் நீங்கள் பயன்படுத்தும்படியாக தாவீதினிடத்திலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்? சுருக்கமாகக் குறிப்பிடவும்

- தேவனைக்குறித்து தாவீது என்ன அறிந்திருந்தார்?

- இந்தச் சூழ்நிலையில் தேவனுடைய வார்த்தை என்ன பங்களிப்புச் செய்தது?

- தேவனைக் குறித்து தாவீது என்ன அறிந்திருந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? அல்லது தாவீதினால் எழுதப்பட்ட கருத்துக்கள் உங்களால் சரியென்று உறுதியாகச் சொல்ல முடியாததாக இருக்கின்றனவா? இவற்றை ஒரு குழுவாக கலந்துரையாடுங்கள்.

- நீங்கள் பயம் மற்றும் கலக்கமடையும்போது உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலே உதவுவது எதுவென்று அடிப்படை ஆதாராமாகக் கற்றுகொண்டிருக்கிறீர்கள்?

*9. நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.*

*10. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.*

*11. தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?*

*12. தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது; உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன்.*

*13. நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?*

## சுருக்கவுரை

நம் வாழ்க்கையில் அச்சுறுத்தும் சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது இயற்கையாகவே நமக்குப் பயம் வருகிறது. நம் உடல் சதையால் ஆனது, வேதனையில் மெலிந்துபோகிறது, மரணத்தைக் கண்டு பயந்து ஓடுகிறது. இருப்பினும், இந்த வாரத்தில் நாம் ஆய்வு செய்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் பயம் நம்மை ஆட்கொள்ளாதபடி அல்லது எளிமையாக நம்மை ஆளாதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். விசுவாசத்தைப் பெருக்கி, பயத்தை அடக்கியாளவேண்டும். இயேசு படகில் இருக்கிறார் அல்லது கடலில் நடந்து வருகிறார் என்கிற எண்ணத்தினால் சீஷர்களின் பயமானது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கடுங்காற்றையும் கொந்தளிக்கும் கடல் அலைகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் இயேசுவுக்கு இருந்தது. விசுவாசம், பயம் இவற்றில் எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சீஷர்களுக்கு இயேசு நினைப்பூட்டினார். விசுவாசம் பயத்தை வெற்றி கொள்கிறது.

அடுத்ததாக பயத்தினாலே ஒடுக்கப்பட்டதை, நசுக்கப்பட்டதை, கண்ணீர்விட்டதை அறிக்கையிட்ட தாவீதைக் குறித்துப் பார்த்தோம். இருப்பினும், பின்சந்ததிகள் பயன்பெறுவதற்காக, "நான் பயப்படும் நாளில் உம்மை நம்புவேன்" என்று வேதத்தில் சங்கீதம் 56:3-ல் எழுதி வைத்துள்ளார். இனி வரப்போகும் ராஜாவான தாவீது தனக்கு வந்த சூழ்நிலையைக் குறைத்துச் சொல்லவில்லை அல்லது தனது உணர்வுகளைத் தள்ளிவிடவில்லை. மாறாக பயத்தின் அடிமைத்தனத்தை எவ்வாறு ஜெயித்தார் என்று விவரிக்கிறார், அவர் தனது நம்பிக்கையை கர்த்தர் மேல் வைத்திருந்தார். அப்படிச் செய்ததினாலே அவர், "நான் பயப்படேன்" (வச.11) என்று சொல்லுகிறார். மனிதன் வெறும் மனிதன்தான், ஆனால் தேவன் சர்வவல்ல தேவன். அதனால் "தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்" (வச.9) என்கிறார். அவருடைய உறுதியான நம்பிக்கையின் வார்த்தை பிற்பாடு அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் தேவ ஆவியினாலே ரோமர் 8:31-ல் "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" என்று பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

ஆகையினாலே பயம் வரும்போது "நான் ஏன் பயப்படுகிறேன்?" என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அதன்பின் தொடர்ந்து விசுவாச வாழ்வில் முன்னேறுவீர்களா? அல்லது பயத்தில் திகைத்து நின்று விடுவீர்களா என்று நீங்களே தீர்மானியுங்கள்.

# வாரம் இரண்டு

நாம் பார்க்கிற காட்சிகளினாலோ அல்லது நாம் கேட்கும் வார்த்தைகளினாலோ பயம் உண்டாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. நம்முடைய நம்பிக்கையைப் பொருத்தே பயம் வேர்விடும். நம் மனது பயத்துக்கு இடங்கொடுத்துவிட்டால் நம்முடைய உடல் ஆவி அனைத்தையும் பாதிக்கிறது.

தாவீது சங்கீதம் 56:3-ல் என்ன எழுதியிருக்கிறார் என்பது நினைவுக்கு வருகிறதா? "நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்." கடுங்காற்றின் மத்தியில் இயேசு சீர்களிடத்திலே என்ன சொன்னார் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர் அவர்களை நோக்கி: "ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று?" என்றார் (மாற்கு 4:40) இந்த இரண்டு சம்பவங்களிலும் பயம் வரும்போது அந்த இடத்திலே விசுவாசத்தோடு தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்.

இங்கே நம்ப முடியாத அதிசய நிகழ்வு என்ன நடக்கிறது என்றால் தேவனுக்குப் பயப்படும் பயம் வரும்போது, பயத்திலிருந்து விடுதலை பெறுகிறோம் என்பதுதான்! இப்படிப்பட்ட பயம் நாம் தேவன் மீது பயபக்தி, மரியாதை, மதிப்புணர்வு, நம்பிக்கை, விசுவாசம் ஆகியவற்றினால் வெளிப்படுத்தப்படுகிறது. அவர் தேவனாக இருப்பதினாலே அவர் யார், என்ன சொல்கிறார், அவரால் எதையும் எளிதாக செய்ய முடியும் என்பதில் நம்பிக்கை கொள்வதாகும்.

தேவனைக் குறித்து அதிகம் தெரிந்துகொள்வது, மற்றும் அவர் உங்கள் மீது என்ன நோக்கங்களைக் கொண்டிருக்கிறார் என்பதுதான் இந்தப் பாடம். அதன் பின்பு உங்களுடைய வாழ்க்கை தேவனுக்குப் பயப்படும் பயத்தினால் ஆளுகை செய்யப்படுகிறதா அல்லது சூழ்நிலைகளினால் ஏற்படும் பயத்தினால் ஆளுகை செய்யப்படுகிறதா என்பதை நீங்களே தீர்மானிக்கலாம்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** நீதிமொழிகள் 29:25 வசனத்தை சத்தமாக வாசியுங்கள். குழுவினரும் ...

- '**பயம்**' என்ற வார்த்தையைச் சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.
- '**நம்புகிற**' என்கிற வார்த்தையை **ந** என்று குறிக்கவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனத்தில் எந்த இரண்டு மனநிலைகள் ஒன்றுக்கொன்று எதிராக இருக்கின்றன? ஒவ்வொன்றின் முடிவு என்ன?

### நீதிமொழிகள் 29:25

மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.

## உட்கருத்து

இந்த வசனத்தில் 'நம்புகிறவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற எபிரேய வார்த்தைக்கு, நம்பத்தகுந்த ஒருவர் மீது அல்லது ஒன்றின்மீது நம்பிக்கை வைப்பதனால் உண்டாகும் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு என்கிற பொருளை வெளிப்படுத்துகிறது.

'உயர்ந்த அடைக்கம்' என்பது மேன்மையான நிலைக்குக் கொண்டு செல்லப்படுதல் என்கிற பொருளைத் தருகிறது, அதனால் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

- நீங்கள் இந்த வேதபகுதியை கவனமாகப் பார்த்து என்ன கண்டுபிடித்தீர்கள், மனிதனுக்குப் பயப்படும் பயமும் தேவன் மேல் வைக்கும் நம்பிக்கையும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்கின்றனவா? அல்லது இது அல்லது அது என்ற சூழ்நிலையாக இருக்கிறதா? உங்களுடைய பதிலை விளக்கவும்.

## உற்றுநோக்கு

நீங்கள் தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றால் முதலாவது தேவனைக்குறித்து, அவர் என்னவாக இருக்கிறார், அவரால் செய்ய முடிந்தது என்ன, அவரின் வல்லமை எப்படிப்பட்டது, அவருடைய ஆளுகையின் எல்லை என்ன, ஒரு தனிநபராகிய உங்கள் மீது அவர் கொண்டிருக்கும் நோக்கங்கள் என்னென்ன என்பதை எல்லாம் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை அலசி ஆராய்வதற்கு நமக்கு நேரம் போதாத காரணத்தனாலே தேவன் யார் என்பதைக் குறித்த ஆழமான புரிந்துகொள்ளுதலைத் தரும் ஒரு சில வசனங்களைமட்டும் நாம் பார்ப்போம்.

**தலைவர் :** சங்கீதம் 103:19, 89:14, ஏசாயா 14:24, 27, 45:5-7 மற்றும் எரேமியா 33:2-3, 32:26,27 ஆகிய வசனங்களை சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **'கர்த்தர்'** மற்றும் கர்த்தர் என பொருள்பட வருமிடங்களில் ஒரு முக்கோணம் வரையவும்.

## கலந்துரையாடு

- ஒவ்வொரு வேதபகுதியையும் பார்த்து, கர்த்தரைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள் என்பதையும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உங்களுக்குப் பயம் வரும்போது தேவனைக் குறித்த இந்த அறிவு உங்களுக்கு எந்த வகையிலே உதவும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

### சங்கீதம் 103:19

*கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.*

### சங்கீதம் 89:14

*நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.*

### ஏசாயா 14:24,27

*24. நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலை நிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்.*

*27. சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?*

## ஏசாயா 45:5-7

5. நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத் தவிரத் தேவன் இல்லை.

6. என்னைத் தவிர ஒருவரும் இல்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும் படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன்; நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.

7. ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்.

## எரேமியா 33:2-3

2. இதைச் செய்கிற கர்த்தருமாய், இதைத் திடப்படுத்தும்படிக்கு இதை உருவேற்படுத்துகிற கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் நாமமுள்ளவர் சொல்லுகிறது என்னவென்றால்:

- ஏசாயா 45:7-ல் கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிற காரியங்கள், சங்கீதம் 103:19 மற்றும் 89:14-ல் உள்ள சத்தியங்களைப் புரிந்து கொள்ள எவ்வாறு உதவுகின்றன?

- இதிலுள்ள சத்தியங்களையெல்லாம் நீங்கள் தழுவிக்கொள்ள ஆயத்தமா? அவற்றை நீங்கள் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், நீங்கள் உங்கள் வாழ்வில் சந்திக்கப்போகும் ஒவ்வொரு சூழ்நிலையையும் கர்த்தர் ஆளுகை செய்யவல்லவராய் இருக்கிறாரென்று நம்புகிறீர்களா?

● சங்கீதம் 89:14-ம் வசனத்தை மீண்டும் பார்க்கவும், கர்த்தர் தமது வல்லமையை எவ்வாறு ஆளுகையில் பயன்படுத்துகிறார்? அதாவது, கர்த்தர் நம்பத்தக்கவரா? விளக்கமான பதில் தருக.

## உற்றுநோக்கு

கர்த்தருடைய வல்லமைபற்றி சுருக்கமாகப் பார்த்தோம். இப்போது, கர்த்தர் உங்களுடன் எப்படிப்பட்ட உறவு வைத்துள்ளார் என்று கூர்ந்து கவனிப்போம்.

**தலைவர் :** சங்கீதம் 139:13-17, எபேசியர் 1:3-6, 2:8-10 சங்கீதம் 138:8 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

● குழுவினரை <u>**என், நான், நம்மை, நாம், நீர், உமது, உமக்கு**</u> போன்ற சொற்களைச் சத்தமாக வாசித்து, அடிக்கோடிடச் சொல்லவும்.

3. என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு (பதில்) கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

### எரேமியா 32:26-27

26. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

27. இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

### சங்கீதம் 139: 13-17

13. நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

14. நான் பிரமிக்கத்தக்க அதிசமாய் உண்டாக்கப்பட்ட படியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

15. நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.

16. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

17. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்.

## எபேசியர் 1:3-6

3. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

## கலந்துரையாடு

- ஒவ்வொரு வேதபகுதியாகப் பார்த்து அதில் நீங்கள் குறித்த என், நான், நம்மை, நீர், உமது போன்ற சொற்களிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள். பயத்தைக் கையாள்வதற்கு அல்லது பயப்படாமல் இருப்பதற்கு இதிலுள்ள ஒவ்வொரு உண்மையும் எவ்வாறு உதவி செய்யும் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

- நீங்கள் கண்ட எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் இதயத்தை அதிகமாகத் தொட்ட, தேவனைக் குறித்த ஓர் உண்மை என்ன?

4. தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே,

5. பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,

6. தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாயத் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.

## எபேசியர் 2:8-10

8. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

9. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.

10. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்;

அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

## சங்கீதம் 138:8

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

## 1 யோவான் 4:9,10,18

*9.* தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

*10.* நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

*18.* அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப்

## உற்றுநோக்கு

"தேவனுடைய அன்பைப் பற்றி என்ன சொல்வது" என்று நீங்கள் ஆச்சரியமடைகிறீர்களா? இது ஒரு நல்ல கேள்வி. இந்த அற்புதமான உட்கருத்தை நீடித்திருக்க நாம் பத்திரப்படுத்தியுள்ளோம்.

**தலைவர் :** 1 யோவான் 4:9-10, 18 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினரும்...

- **'அன்பு'** என்று வருகிற இடங்களில் இதயம் போன்று வரையவும். ♡
- **தேவனைக்** குறித்த சொற்கள் வரும் இடத்தில் முக்கோணம் வரையவும். △

**தலைவர் :** மறுபடியும் இதே வேதபகுதியை வாசியுங்கள். இம்முறை குழுவினர்...

- <u>நாம்</u>, <u>நம்மேல்</u>, <u>நம்மிடத்தில்</u>, <u>நம்முடைய</u> என்ற சொற்கள் அனைத்தையும் அடிக்கோடிடவும்.
- **'பயம்'** என்ற சொற்களைச்சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வரையவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனங்களிலிருந்து தேவனைக் குறித்தும் அன்பைக் குறித்தும் நீங்கள் கற்றது என்ன?

### உட்கருத்து

கிருபாதாரபலி என்கிற வார்த்தைக்குப் பொருள் ''திருப்திப்படுத்துதல், விலைக்கிரயம்'', என்பதாகும். இது ஒரு கடனை திரும்பச் செலுத்துதல் பற்றிச் சொல்லுகிறது.

- நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருந்தால் அதாவது தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட ஒருவராக இருந்தால், உங்களைப்பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- பயத்தைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இந்த வேதபகுதியில் நீங்கள் கண்டவை தேவனைக் குறித்த உங்கள் கண்ணோட்டத்தை எவ்வாறு முறைப்படுத்தியது? பயத்தை குறித்த உங்களுடைய கண்ணோட்டமும் எவ்வாறு முறைப்படுத்தப்பட்டது?

- இந்தப் பாடத்தில் தேவனை இன்னும் அதிகமாய் நம்புவதற்கும், அதனால் தேவனுக்குப் பயப்படும் பயத்தில் நீங்கள் வாழ உதவிடும் ஏதாவது குறிப்பிட்ட உண்மைகளைக் குறித்தும் கலந்துரையாடுங்கள்.

புறம்பே தள்ளும்;
பயமானது
வேதனையுள்ளது,
பயப்படுகிறவன் அன்பில்
பூரணப்பட்டவன் அல்ல.

## சுருக்கவுரை

நீங்கள் தேவனைக் குறித்தும் அவருடைய வழிகளைக் குறித்தும் அதிகமாகப் பழைய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் அவரை அதிகமதிமாக நீங்கள் நம்புவதற்கு பழைய ஏற்பாட்டில்தானே தேவன் தம்முடைய குணநலன்களை மற்றும் வல்லமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு தன் இறுதிக் கடிதத்தை எழுதினபோது, தன்னுடைய மரணம் சமீபித்திருப்பதாகவும், தேவனுடைய வார்த்தையாகிய பொக்கிஷத்தைக் காத்துக்கொள்ளும்படியும் குறிப்பிட்டு: "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" ( 2 தீமோத்தேயு 1:7) என்று நினைப்பூட்டி ஆரம்பித்தார்.

இந்த வாரத்தில் நம்முடைய ஆய்வானது தேவனுடைய வல்லமையானது, நல்லவைகள் மீதும் தீங்கின் மீதும் அவருடைய முழு ஆளுகை இருப்பதைக் குறித்து உங்களுக்கு ஒரு நிச்சயமான தெளிவை உண்டாக்கியிருக்கும். இத்துடன் தேவன் மகா பெரிய அன்புடன் உங்களை நேசிக்கிறார் என்பதையும் இணைத்துச் சிந்தியுங்கள். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறவர், உங்களுடைய வாழ்க்கைக்கு நோக்கம் இருக்கிறது. நீங்கள் நற்காரியங்களைச் செய்வதற்கு படைக்கப்பட்டிருக்கிறீர்கள் – அந்த நற்காரியங்களை சர்வவல்லமையுள்ள தேவன் உங்களுக்காகத் தெரிவு செய்திருக்கிறார்.

இதை அறிந்ததோடு இந்த சிறிய பாடத்தில் நீங்கள் கண்ட மற்ற உண்மைகள், உங்களுடைய பக்தியை, உங்களுடைய மரியாதையை, உங்களின் உறுதியை, வானத்தையும் பூமியையும் படைத்தவரிடத்தில் உங்களுடைய நம்பிக்கையையும் மிக மிக அதிகமாக்கியிருக்க வேண்டும், இதனால் நீங்கள் எரேமியா தீர்க்கதரிசியோடு சேர்ந்து, "...உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (எரேமியா 32:17) என்று சொல்லுவீர்கள். கர்த்தருக்குப் பயப்படுவதை அனுபவமாக்கிக்கொண்டால் – அதாவது இந்த பயமானது மற்ற ஒவ்வொரு பயத்தையும் வெற்றிகொள்ளும். நீங்கள் பயத்தை எதிர்கொள்ளும்போது கர்த்தருக்குப் பயப்படும் பயம் உங்களுக்குச் சுயக்கட்டுப்பாட்டைத் தரும்.

நம்முடைய அடுத்த பாடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் குறித்து இன்னும் ஆழமாகப் பார்ப்போம் – இந்த பயம் உங்களை மற்ற எல்லா பயங்களினின்றும் விடுதலையாக்கும், இது ஒரு விடுதலை தரும் வேத ஆய்வு!

பயமில்லாமல் வாழ்வது உள்ளத்தைப் பரவசப்படுத்தக்கூடியதாக இருக்கும், அல்லவா? உங்களுடைய மனதைத் தாக்கும் பயத்திலிருந்தும், உங்களுடைய ஆத்துமாவிலே சஞ்சலத்தோடிருப்பதிலிருந்தும், சொல்ல முடியாத கலக்கத்தைக் கொண்டுவருவதிலிருந்தும், மன உளைச்சலிலிருந்தும், சரீரத்தில் வேதனைகளிலிருந்தும் விடுதலைபெறுவது மகிழ்ச்சியாக இல்லையா? மனிதனுக்குப் பயப்படாமல் இருப்பதும், மரணத்தைக் குறித்தும், வாழ்க்கையைக் குறித்தும் கவலையில்லாமல் இருப்பதும் மகிழ்ச்சியாக இல்லையா?

"இவையெல்லாம் நடக்கக்கூடிய காரியமல்ல" என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம்.

நல்லது, நீங்கள் தேவனுக்குப் பயப்பட்டு வாழக் கற்றுக்கொள்ளும் பொழுது, தேவனாலே இப்படிப்பட்ட ஒரு விடுதலையான வாழ்வு உண்மையில் நடக்கக்கூடியதுதான். கர்த்தருக்குப் பயப்படும் பயம் மற்ற எல்லாப் பயங்களையும் கீழ்ப்படுத்திவிடும்.

ஆக, கர்த்தருக்குப் பயப்படும் பயம் எப்படி இருக்கும்? அதை நாம் எப்படிப் பெற்றுக்கொள்வது? இந்த வாரத்தில் இதைப்பற்றி ஆய்வு செய்வோம். கர்த்தருக்குப் பயப்படுதலைக் குறித்து ஆராய்ந்து நம்மைத் தெளிவுபடுத்துவதற்கு இன்னும் நான்கு வாரங்கள் இருக்கின்றன. மேலும் கர்த்தருக்குப் பயப்படுதலினால் உண்டாகும் விடுதலையின் வல்லமை எவ்வாறு நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் வாழ முடியும் என்பதையும் தெளிவுபடுத்தும்.

இந்த வாரத்தின் பாடத்தைத் துவங்கும் போது சங்கீதம் 119:38-ஐ உங்களுடைய ஜெபமாக இருக்கும்படி விரும்புவீர்கள்: "உமக்குப் பயப்படுகிறதற்கு ஏற்ற உமது வாக்கை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும்."

## உற்றுநோக்கு

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை வரையறுக்கும் அல்லது விளக்கும் சில வசனங்களைப் பார்ப்போம். நீதிமொழிகளின் நோக்கத்தை, கர்த்தருக்குப் பயப்படும் பயத்திற்கான வரையறுத்தலை அறிமுகப்படுத்தும் நீதிமொழிகள் 1-ம் அதிகாரத்திலிருந்து இதை ஆரம்பிக்கலாம்.

### நீதிமொழிகள் 1:1-7

1. தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்.

2. இவைகளால் ஞானத்தையும், போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து,

3. விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்.

4. இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.

5. புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான். விவேகி நல்லாலோசனைகளை அடைந்து;

6. நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்.

7. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்.

**தலைவர் :** நீதிமொழிகள் 1:1-7, 8:12-14 மற்றும் 9:10-11 ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'ஞானம்'**, **'ஞானி'** என்ற சொற்களுக்குப் பக்கத்தில் ஞா என்ற எழுத்தை பெரிதாக எழுதவும்.
- **'அறிவு'** என்று வருமிடங்களில் இரட்டை அடிக்கோடிடவும்.
- **'கர்த்தருக்குப் பயப்படுதல்'** **'கர்த்தருக்கு பயப்படும் பயம்'** என்கிற இடங்களில் வளைந்து  நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- நீதிமொழிகள் புத்தகத்தின் நோக்கத்தைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இந்த ஒவ்வொரு வசனத்திலும் பேசுவது யார்?

- ஞானத்தைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- அறிவைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

## உட்கருத்து

பழைய ஏற்பாட்டில் குறைந்தது பதினைந்து வெவ்வேறான எபிரேய வார்த்தைகள் 'பயம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக மனிதர்களின் எல்லாவிதமான பயத்தையும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தையும் இது குறிக்கும். ஒவ்வொரு சூழ்நிலையைப் பொருத்து மொழிபெயர்பு மாறுபடும்.

கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது கனம் (மதிப்பு), பயபக்தி, நம்பிக்கை, கீழ்ப்படிதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது தேவன் தன்னைக் குறித்தும், தன்னுடைய அதிகாரத்தைக் குறித்தும் சொல்வதை அங்கீகரிப்பதாகும். இது அதற்கேற்றாற்போல நாம் செயல்படத் தூண்டுவதோடு அறிவையும் ஞானத்தையும் தேடுவதற்கும் நம்மைத் தூண்டுகிறது.

புதிய ஏற்பாட்டில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள 'பயம்' என்பதின் கிரேக்க மூலச்சொற்களும் வெவ்வேறான பொருளைத் தருவதாக இருக்கின்றன, பழைய ஏற்பாட்டைப்போல, கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்ற சொல் கனம், பயபக்தி என்ற பொருளைத் தருவதாக இருக்கிறது.

- கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தைக் குறித்து நீதிமொழிகள் 1:7 என்ன சொல்லுகிறது?

## நீதிமொழிகள் 8:12-14

12. ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்பண்ணி, நல்யுக்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன்.

13. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்.

14. ஆலோசனையும் மெய்ஞ்ஞானமும் என்னுடையவைகள், நானே புத்தி, வல்லமை என்னுடையது.

## நீதிமொழிகள் 9:10-11

10. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.

*11. என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.*

- அறிவும் ஞானமும் எவ்வாறு முக்கியமாக இருக்கின்றன? ஏன்?

## உட்கருத்து

அறிவுக்கும் ஞானத்திற்கும் தொடக்கமாக இருப்பது, கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்று நீதிமொழிகள் நமக்குச் சொல்லுகிறது.

அறிவு என்பது நம் "ஐம்புலன்களாலும் பெறப்பட்ட விபரங்களைத் தொகுத்து ஆராய்ந்து நல்லதொரு முடிவெடுக்கும் திறமையாகும்". அறிவு நமக்குத் தகவலளிக்கிறது, மதிநுட்பத்தைக் கொடுக்கிறது அதனால் நாம் செயல்பட முடிகிறது.

ஞானம் என்பது வாழ்க்கையை நாம் எவ்வாறு நடத்துவது என்பதை விளக்குகிறது. உலக ஞானம், மனித ஞானம், தேவஞானம் என இருக்கின்றன. (1 கொரிந்தியர் 1:19-21) ஞானமானது வாழ்க்கையை நாம் தேவனை அறிந்துள்ள விதத்தில் நடத்த நம்மைத் தூண்டுகிறது. 1 கொரிந்தியர் 1:31-ல் கிறிஸ்து இயேசுவே "தேவனால் நமக்கு ஞானம்" என்று தேவன் சொல்லுகிறார். பவுல் எபேசிய விசுவாசிகளுக்காக "தம்மை (தேவனை) நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை..." தந்தருள வேண்டுமென்று தேவனிடத்தில் ஜெபித்தார் (எபேசியர் 1:17)

## உற்றுநோக்கு

நீதிமொழிகள் புத்தகத்தின் தொடக்கத்திலேயே சாலொமோன் தேவனுடைய ஞானத்தை விரும்பாதவர்களுக்கு என்ன நடக்கிறது என்று விளக்குகிறார்.

**தலைவர் :**நீதிமொழிகள் 1:23-31, ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **உங்களுக்கு, நீங்கள், உங்கள், அவர்கள், தங்கள்** என்ற அனைத்தையும் அடிக்கோடிடவும்.
- ஞானத்தைக் குறிக்கின்ற **என், நான், நானும், என்னை** ஆகிய வார்த்தைகளை **ஞா** என்று குறிக்கவும்.
- **கர்த்தருக்குப் பயப்படுதல்** என்ற சொற்றொடரைச் சுற்றி வளைவு நெளிவு கோடுகளை வரையவும்.

## கலந்துரையாடு

- உங்களுக்கு, நீங்கள், உங்கள், அவர்கள், தங்கள் என்ற வார்த்தைகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இவையெல்லாம் தேவனுக்குப் பயப்படும் பயத்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன? இதன் மூலம் தேவனுக்குப் பயப்படும் பயத்தை எவ்வாறு வரையறுத்துக் கூறலாம்?

### நீதிமொழிகள் 1:23-31

*23. என் கடிந்து கொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ, என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்.*

*24. நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை.*

*25. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள்.*

*26. ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம் பண்ணுவேன்.*

*27. நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கணும் உங்கள்மேல் வரும்போதும் ஆகடியம் பண்ணுவேன்.*

*28. அப்பொழுது அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள்.*

*29. அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்து கொள்ளாமற் போனார்கள்.*

*30. என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை. என் கடிந்து கொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள்.*

*31. ஆகையால் அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள்.*

- இந்த வசனங்களெல்லாம் நமக்கு என்ன சொல்லுகின்றன என்று சிந்திக்கும்போது அது உங்களுக்கு எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது? என்ன விதமான உணர்வை உங்களுக்குள் தூண்டுகிறது? இந்த உண்மைகளிலிருந்து என்ன செயல் அல்லது எச்சரிக்கை உண்டாகும்?

- எப்போதாவது இது உங்களைப்பற்றிச் சொல்லியிருந்ததா அல்லது உங்களுக்குத் தெரிந்தவரைப்பற்றி சொல்லியிருந்ததா? அப்படியானால் அதன் விளைவுகள் எப்படி இருந்தன?

## உற்றுநோக்கு

ஞானத்தை வேண்டாமென்று ஒதுக்காதவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறார்? சாலோமோன் தன்னுடைய மகனுக்குச் சொல்லும் வார்த்தைகளைத் தொடர்ந்து வாசிப்போம்.

**தலைவர் :** நீதிமொழிகள் 2:1-12, ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- சாலொமோனின் **மகனைக்** குறிக்கும் ஒவ்வொரு சொல்லையும் வட்ட மிடவும்.
- **ஞானத்தைக்** குறிக்கிற சொற்களுக்குப் பக்கத்தில் **ஞா** என்று பெரிதாக எழுதவும்.
- '<u>அறிவு</u>' என்று வருகிற இடங்களில் இரட்டை அடிக்கோடிடவும்.
- **'கர்த்தருக்குப் பயப்படுதல்'** என்கிற இடத்திலே வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.

## கலந்துரையாடு

- ஒருவன் கர்த்தருக்குப் பயப்படுதலை எவ்வாறு கண்டு கொள்ளுவான்?

### நீதிமொழிகள் 2:1-12

1. என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும் பொருட்டு,

2. நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி,

3. ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து,

4. அதை வெள்ளியைப்போல் நாடி; புதையல்களைத் தேடுகிறது போல் தேடுவாயாகில்,

5. அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்.

6. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

7. அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்.

8. அவர் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து, தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார்.

9. அப்பொழுது நீதியையும், நியாயத்தையும், நிதானத்தையும், சகல நல்வழிகளையும் அறிந்து கொள்ளுவாய்.

10. ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது,

11. நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்.

12. அதினால் நீ துன்மார்க்கனுடைய வழிக்கும், மாறுபாடு பேசுகிற மனுஷனுக்கும்.

- இந்த வேத பகுதியிலிருந்து ஞானம், அறிவு இவைகளின் பிறப்பிடம் பற்றி என்ன கற்றுக் கொண்டீர்கள்? கர்த்தருக்குப் பயப்படுதலுக்கு இது எந்த விதத்தில் தொடர்புடையதாக இருக்கிறது?

- வசனங்கள் 9லிருந்து 12-வரையில் கர்த்தருக்குப் பயப்படுதலினால் உண்டாகும் பயன்கள் என்னென்னவென்று விளக்கப் பட்டுள்ளன?

- உங்களுக்கு பிள்ளைகளோ அல்லது பேரப்பிள்ளைகளோ இருந்தால் நீதிமொழிகள் 1 மற்றும் 2-ல் நீங்கள் கற்றுக் கொண்டவைகளிலிருந்து எவ்வாறு அவர்களுக்கு புத்திமதி சொல்லுவீர்கள்?

## உற்றுநோக்கு

**தலைவர் :**நீதிமொழிகள் 14:26-27, ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- '**கர்த்தருக்குப் பயப்படுகிறவன், பயப்படுதல்**' என்கிற இடத்திலே வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- 'கர்த்தருக்குப் பயப்படுதல்' என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- கர்த்தருக்குப் பயப்படுதல் குறித்து நீங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டதோடு இந்த வசனத்தில் உள்ளது எவ்வாறு ஒத்திருக்கிறது?

### நீதிமொழிகள் 14:26, 27

26. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.

27. கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்.

## உபாகமம் 17:14, 18-20

14. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் குடியேறினபின், நீ; என்னைச் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளையும் போல, நானும் எனக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்பாயானால்;

18. அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமை கொள்ளாமலும், கற்பனையைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும்,

19. இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும்பொருட்டு,

## உற்றுநோக்கு

ஒரு சமுதாயத்தில் உள்ள அரசனோ அல்லது ஒரு அதிகாரியோ அல்லது ஒரு சாதாரண மனிதனோ கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை எவ்வாறு பெற்றுக் கொள்கிறான்?

**தலைவர் :** உபாகமம் 17:14, 18-20 மற்றும் 31:10-12 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **கற்பனைகள், நியாயப்பிரமாணம், கட்டளை,** மற்றும் அதைக் குறிப்பிடும் சொற்களைச் சுற்றிலும் ஒரு கட்டத்தை வரையவும். ☐
- **'தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து'** என்கிற இடங்களில் வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- நியாயப்பிரமாணம், கற்பனைகள் கட்டளைகள், ஆகியவற்றைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- நீங்கள் ஆராய்ந்ததின்படி ஒருவன் எவ்வாறு கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் கற்றுக் கொள்ளுவான்?

- முதலில் உள்ள உபாகமம் வேதபகுதியின்படி, யார் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார்? இதை எவ்வாறு செய்து முடிக்க முடியும்? இதன் நோக்கம் என்ன?

- கர்த்தருக்குப் பயப்படும் பயத்தின் முக்கியத்துவம் என்னவென்று இப்பகுதி உங்களுக்குச் சொல்லுகிறது?

- உபாகமத்திலிருந்து குறிக்கப்பட்ட இரண்டாவது வேத பகுதியிலிருந்து யார் கர்த்தருக்குப் பயப்படவேண்டும்? இது எவ்வாறு சாத்தியமாகும்?

- கர்த்தருக்குப் பயப்படுதலை நீங்கள் வாஞ்சிப்பீர்களானால் அதை எவ்வாறு பெற்றுக் கொள்வீர்கள்? அது பார்வைக்கு என்னவாக இருக்கும்?

*20.* அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்; இப்படிச் செய்வதினால்; தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்.

## உபாகமம் 31:10-12

*10.* (மோசே) அவர்களுக்குக் கட்டளையிட்டது என்னவென்றால்: விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில்,

*11.* உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில், இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும் போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர்

எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய்.

12. புருஷர்களும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டு கற்றுக்கொண்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கும் படிக்கும்,

- இப்போது நீங்கள் கற்றுக்கொண்ட எல்லாவற்றிலுமிருந்து, உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எல்லா பயத்தையும் மேற்கொள்வதற்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் எவ்வாறு உதவி செய்யும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

- கர்த்தருக்குப் பயப்படும் வாழ்க்கை வாழ்வதை நீங்கள் தெரிந்து கொள்வதற்கு விரும்புகிறீர்களா?

- மேலே உள்ளபடி வாழவேண்டுமானால், நீங்கள் என்னென்ன திருத்தங்களை உங்கள் வாழ்வில் செய்ய வேண்டியிருக்கும்?

- அவைகள் (மேலே செய்யப்படும் திருத்தங்கள்) உண்மையில் விலையேறப் பெற்றதாக இருக்குமா?

## சுருக்கவுரை

நீங்கள் வாழும் கலாச்சாரத்தை, சமுதாயத்தைப் பார்க்கும்போது, தங்கள் வாழ்க்கையை மிகவும் எளிதாக அழித்துக்கொண்ட பலரைப் பார்த்திருப்பீர்கள், ஏன் என்று நீங்கள் ஆச்சரியமடைந்திருக்கலாம். மற்றவர்களைப் பாதித்தாலும் தங்களுடைய அப்போதைய பேராசையை நிறைவேற்றுவதற்காகவும், தங்களுடைய சொந்த எதிர்காலத்தையே அடமானம் வைக்கும்படியும் - பணத்தை, புகழை, அதிகாரத்தை, பாலுறவை, போதைப்பொருட்களை, சாராயத்தை, தொடர்ந்து செல்லுகிற அவர்கள் வாழ்க்கையில், இழந்திருப்பது எதை?

அவர்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் நடந்து, அறிவையும் ஞானத்தையும் நாடிச் சென்றிருந்தால் மேலே உள்ளபடி செய்திருப்பார்களா? மனித ஞானத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் பின்பற்றாமல் அல்லது கர்த்தருக்குப் பயப்படுதலை வெறுத்து அலட்சியம் செய்து, நம்முடைய வாழ்க்கையில் அவருடைய அதிகாரத்தை மறுக்கின்ற உலக ஞானத்தையும் பின்பற்றாமல் தேவனை அறிகிற அறிவிலும் ஞானத்திலும் நடத்திருந்தால் மேலே உள்ளபடி செய்திருப்பார்களா?

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிரபலமானவர்களின் வெவ்வேறான பேச்சு, நடை, உடை, பாவனைகள், அவர்களின் முன்னுரிமைகளை மக்கள் தங்கள் வாழ்க்கையின் மாதிரியாக வைப்பதற்குத் தீர்மானிக்கிறார்கள். இந்தப் புகழ்பெற்ற மனிதர்களிடம் ஊடகங்கள் (மீடியா) கலாச்சாரம், அரசியல், வாழ்க்கை முறைகளைக் குறித்துக் கருத்துச் சொல்லும்படி கேட்கிறார்கள். தேவனைப் பின்பற்றுவதைவிட இவர்களின் வார்த்தைகளை உலகம் கவனமாகக் கேட்கிறது, பின்பற்றுகிறது. வேதாகமம் தேவையற்ற பழைய குப்பையைப் போல ஒதுக்கிவைக்கப்படுகிறது!

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உண்மையான வரலாற்றினை ஒருவர் படிக்கும் போது இந்த நாடு ஒரு காலத்தில் தன்னுடைய நம்பிக்கையை மிக தைரியமாக தேவன்மேல் வைத்திருந்தது என்று தெளிவாகிறது. இந்த விசுவாசம் அமெரிக்க தேசப்பணத்தில் அச்சிடப்பட்டிருந்தது, முக்கியமான நினைவுச் சின்னங்களில் பொறிக்கப்பட்டிருந்தது, நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டத்திலும் எழுதப்பட்டிருந்தது. மெய்யாகவே, தேவகட்டளைகளின் அடிப்படையிலேயே

அமெரிக்காவின் சட்டங்கள் அமைந்திருந்தன. ஓரளவுக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் கலாச்சாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

இப்போதோ கர்த்தருக்குப் பயப்படும் பயம் எதிர்க்கப்படுகிறது, ஏளனம் செய்யப்படுகிறது, பல நேரங்களில் மனிதனின் அச்சுறுத்தலினால் பேசவிடாமல் தடுக்கப்படுகிறது. அமெரிக்க தேசமானது எந்தத் தகுதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதோ அது சமுதாயத்தின் சுயசித்தத்துக்கும், இச்சைகளுக்கும் அடிமைப்பட்டு தேவ வசனத்தை எதிர்ப்பதாகவே உள்ளது. வேதாகமத்தின் தேவனை விசுவாசிக்காத மக்கள் பொதுவான இடங்களில் அவருடைய நாமத்தை உச்சரிப்பதையும் அவருடைய வார்த்தையான நியாயங்களையும ஒழித்துக்கட்டவே விரும்புகின்றனர்.

இந்த வேத ஆராய்ச்சியின் இரண்டாம் பாடத்தில் தேவன் தன்னைப்பற்றி என்ன கூறியிருக்கிறார் என்ற குறுகிய கால அனுபவத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள், அமெரிக்காவின் இதே நிலை நீடித்தால் சர்வல்லமையுள்ள தேவன் அமெரிக்காவுக்கு என்ன செய்வார்? இதன் பதில் இந்த உலகத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவை எல்லாவற்றையும் பார்த்த பிறகு உங்களின் பங்கு என்ன? ஒவ்வொரு பாடத்தையும் முடிக்கும்போது, நீங்கள் கற்றவைகளை மறுபடியும் உங்கள் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். அதைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையை, உண்மையை ஆய்வு செய்கிறீர்கள். இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின்படி: இந்த வார்த்தை என்னும் சத்தியம், பிசாசினிடத்திலிருந்து உங்களை விலக்கிவைக்கும், உங்களை விடுதலையாக்கும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை உங்களுக்குப் போதிக்கும் (யோவான் 8:42-47, 17:14-17).

ஆகையினாலே கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் கற்றுக் கொள்ளுங்கள், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வாழுங்கள், அதை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். அவர்கள் நீங்கள் சொல்வதைக் கேட்பார்களானால் தொடர்ந்து சொல்லுங்கள். அவர்கள் கேட்கவில்லையென்றால் உங்கள் கால்களில் படிந்திருக்கும் தூசியை உதறிவிட்டு, அதைக் கேட்கிற மற்றவர்களைத் தேடிச் செல்லுங்கள். நீங்கள் கடைசிவரை தொடர்ந்து செய்ய வேண்டியதைச் செய்து கொண்டேயிருங்கள். யார் செய்தியை ஏற்றுக்கொள்வார் என்று உங்களுக்குத் தெரியாது. இயேசு சொல்வதைக் கேளுங்கள்:

*நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். (யோவான் 17:14-18)*

# வாரம் நான்கு

வாழ்வின் ஒருசில காரியங்களுக்காக வாழ்வது நல்லது – சாவதும் நல்லது! இருப்பினும் சிலநேரங்களில் மனிதனுக்குப் பயப்படும் பயம், மரணத்தைக் குறித்த பயம், அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சவால்களைக் குறித்த பயங்கள், நீதி மற்றும் உண்மைக்கான நம்முடைய திட நம்பிக்கை மற்றும் பேரார்வத்தை முழ்கடித்துவிடுகிறது.

கர்த்தருக்குப் பயப்படும் பயம் எவ்வாறு மற்ற எல்லாப் பயங்களையும் வெற்றி கொள்கிறது என்றும், தேவனுடைய அதிகாரத்தை சரியாகப் புரிந்துகொண்டு நாம் அவருடன் சரியான உறவு கொண்டிருந்தால் சகலமும் அதினதின் இடத்தில் எவ்வாறு நேர்த்தியாக அமைந்துவிடும் என்றும் நாம் பார்த்தோம், இனிவரும் சில பாடங்களில் நாம் இன்னும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகளையும், நாம் செய்யவேண்டியவைகளையும் கவனத்தில் கொள்ளுவோம்; இதனால் மனிதனுக்குப் பயப்படும் பயம் தொடங்கி அதாவது, சிறிய அளவு பயங்களிலும் கூட நாம் அடிமைத் தனத்திற்குள்ளாகாமல் இருப்போம்.

நாம் கண்ணால் காணக்கூடிய, காதால் கேட்கக்கூடிய, சரீரத்தில் உணரக்கூடிய மனிதனால் பயமுறுத்தப்படும்போது, நம்மால் பார்க்கமுடியாத தேவனை நம்பி, வாழ்வில் முன்னேறிச் செல்வது எப்படி? கர்த்தருக்குப் பயப்படுதல் எவ்வாறு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தாங்குகிறது என்பதைக் கற்றுக் கொண்ட தனி நபர்களிடத்தில் இதற்கான பதிலை வேதத்தில் நாம் காண்போம். தேவன் அவர்களுக்கு என்ன சொன்னார் என்பதையும் அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் பார்ப்போம்.

## உற்றுநோக்கு

இதற்கு முந்தைய பாடத்தின் ஒரு வசனத்திலிருந்து நாம் ஆரம்பிப்போம். இந்த வசனத்தில் மனிதனுக்குப் பயப்படும் பயத்தைக் குறித்தும், அது நம்முடைய வாழ்க்கையில் எதைக் கொண்டுவரும் என்பதை அறிந்துகொள்ளவும் தேவன் விரும்புகிறார்

**நீதிமொழிகள் 29:25**

மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.

**தலைவர் :** நீதிமொழிகள் 29:25 வசனத்தைச் சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'பயம்'** என்கிற இடத்திலே வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.
- **'நம்புகிற'** என்று வருகிற இடத்திலே ஒரு பெரிய **ந** வைக் குறிப்பிடவும்.

## கலந்துரையாடு

- இந்த வசனத்தில் ஒன்றுகொன்று எதிர்மறையாக இருக்கும் இரண்டு காரியங்கள் என்னென்ன?

- மனிதனுக்குப் பயப்படுவதால் உண்டாகும் முடிவு என்ன?

- உங்கள் வாழ்க்கையில் அல்லது உங்களைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையில் கண்ட மனிதனுக்குப் பயப்படுவதினால் வரும் ஆபத்துகள், சிக்கல்கள் (கண்ணிகள்), மற்றும் பிரச்சனைகள் என்னென்ன?

- இதற்கு முன் கற்ற ஒரு பாடத்தில் "உயர்ந்த அடைக்கலம்" என்பது "உயர்ந்த நிலை, பாதுகாப்பு" என்பது பொருளாகும். இந்த நீதிமொழியின்படி இந்த நிலையை நாம் எவ்வாறு அடைய முடியும்?

## உற்றுநோக்கு

நாம் பார்த்ததலிருந்து, நாம் மனிதனுக்கு பயப்பட வேண்டும் அல்லது தேவனை நம்ப வேண்டும். தேவனிடத்திலிருந்து மனிதன் எந்த அளவுக்கு வேறுபட்டிருக்கிறான் என்பதை நீங்கள் காணும் போது அது மகாபெரிய வித்தியாசம் என்று பார்ப்பீர்கள். அழிந்துபோகும் மனிதனைப்பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதைக் குறித்துச் சிந்திக்க சிறிது நேரம் செலவிடுவோம்.

**தலைவர் :** சங்கீதம் 14:1-5, மற்றும் ரோமர் 3:10-18 ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **மதிகெட்டவன்** என்று தொடங்கும் மனிதனைக் குறிக்கும் சொற்கள் அனைத்தையும் அடிக்கோடிடவும்.

- **'பயம்'** என்கிற இடத்திலே சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளை வரையவும்.

### சங்கீதம் 14:1-5

1. தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.

2. தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

3. எல்லாரும் வழிவிலகி, ஏகமாயக் கெட்டுப்போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

4. அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறதில்லை.

5. அங்கே அவர்கள்
மிகவும் பயந்தார்கள்;
தேவன் நீதிமானுடைய
சந்ததியோடே
இருக்கிறாரே.

## ரோமர் 3:10-18

10. அந்தப்படியே:
நீதிமான் ஒருவனாகிலும்
இல்லை;
11. உணர்வுள்ளவன்
இல்லை, தேவனைத்
தேடுகிறவன் இல்லை.

12. எல்லாரும்
வழிதப்பி, ஏகமாய்க்
கெட்டுப்போனார்கள்;
நன்மை செய்கிறவன்
இல்லை, ஒருவனாகிலும்
இல்லை.

13. அவர்கள்
தொண்டை திறக்கப்பட்ட
பிரேதக்குழி, தங்கள்
நாவுகளால் வஞ்சனை
செய்கிறார்கள்;
அவர்களுடைய
உதடுகளின் கீழே
பாம்பின் விஷம்
இருக்கிறது;

14. அவர்கள் வாய்
சபிப்பினாலும்
கசப்பினாலும்
நிறைந்திருக்கிறது.

15. அவர்கள் கால்கள்
இரத்தஞ்சிந்துகிறதற்குத்
தீவிரிக்கிறது.

16. நாசமும்
நிர்ப்பந்தமும் அவர்கள்
வழிகளிலிருக்கிறது;

## கலந்துரையாடு

- தேவனுக்குப் பயப்படாமல், அவரை நேசிக்கிறவர்களைக் குறித்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- இப்படிப்பட்ட மக்களை நீங்கள் எதிர்கொள்ளும்போது அல்லது அவர்கள் அதிகாரத்திற்கு உட்படும்போது அல்லது வேறு எந்த வழியிலேயும் உங்கள் மீது அவர்கள் ஆதிக்கம் செலுத்தும்போது, நீங்கள் பயப்படுகிறீர்களா? அப்படியானால் அதை எவ்வாறு கையாளுவீர்கள்?

## உற்றுநோக்கு

இந்த மக்கள் தேவனைச் சேராதவர்களானால் அவர்கள் வேறு யாரைச் சேர்ந்தவர்கள்?

**தலைவர் :**யோவான் 8:42-44, எபேசியர் 2:1-3, கொலோசெயர் 1:12-14 ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **'தேவன்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை முக்கோணத்தால் குறிக்கவும்.
- **'உங்கள் நீங்கள்,** என்ற சொற்களை அடிக்கோடிடவும்.
- **'பிசாசு' மற்றும் அவனைக் குறிக்கும் பிதா, மனுஷகொலைபாதகன், பொய்யன், அதிகாரப்பிரபு, ஆவி** என்ற சொற்களை ψ திரிசூலத்தால் குறிக்கவும்.

*17. சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்;*

*18. அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை, என்று எழுதியிருக்கிறதே.*

### யோவான் 8:42-44

*(இயேசு தன்மீது நம்பிக்கை வைக்காத மற்றும் தன்னைக் கொல்லத்துடிக்கும் மதத்தலைவர்களிடம் பேசுகிறார்).*

*42. இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்! நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்.*

43. என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?

44. நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்யமனதாயிருக்கிறீர்கள் அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

## எபேசியர் 2:1-3

இந்த வேதவசனங்கள் தேவனுடைய கிருபையினாலே (எந்தத் தகுதியுமற்றவருக்கு அளிக்கப்படும் இலவச ஈவு) இரட்சிக்கப்பட்ட மக்களுக்காக எழுதப்பட்டது. இரட்சிக்கப்படுவதற்கு முன் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதை பவுல் விளக்குகிறார்.

## கலந்துரையாடு

- இயேசு கிறிஸ்துவை நம்பாதவர்களைக் குறித்து யோவான் 8-லிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- அவர்களின் (இயேசுவை நம்பாதவர்கள்) பிதா யார், அவன் என்னவாக இருக்கிறான்?

- உண்மையான கிறிஸ்தவர்களாவதற்கு முன் மக்கள் இருந்த நிலையை எபேசியர் மற்றும் கொலோசெயரில் உள்ள வசனங்களிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இந்த வசனங்களிலிருந்து தேவனைப்பற்றி என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- பிசாசு, அதிகாரப்பிரபு, ஆவி ஆகியவற்றைக் குறித்ததிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன? அவனுடைய அதிகாரம் அல்லது ராஜ்யம் என்றால் என்ன?

1. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.

2. அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்ற படியாகவும் நடந்து கொண்டீர்கள்.

3. அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

## கொலோசெயர் 1:12-14

12. ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கின வரும்;

13. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

14. (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

- மனிதனுக்குப் பயப்படும் பயம் உங்களை ஆள்வதற்கு நீங்கள் ஏன் அனுமதிக்கக்கூடாது என்பதை விளக்க தேவனற்றவர்களைப் பற்றிய இந்த உண்மைகள் எவ்வாறு உதவிடும்?

## சங்கீதம் 118:4-9

4. அவர் கிருபை என்றுமுள்ளதென்று, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக.

5. நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்.

6. கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

## உற்றுநோக்கு

உண்மையான மனிதனுக்குப் பயப்படும் பயத்தை ஒரு மனிதன் எவ்வாறு கையாளுவான்?

**தலைவர் :** சங்கீதம் 118:4-9, வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- '**பயம்**' என்கிற சொல் வரும் இடத்திலெல்லாம் வளைந்து நெளிந்து கோடுகளால் வட்டமிடவும்.
- **என்னை, என், எனக்கு** என்ற சொற்களை அடிக்கோடிடவும்.
- **நம்பு** மற்றும் **பற்றுதலாயிருப்பதே** என்ற இடங்களில் **ந** என்ற எழுத்தைப் பெரியதாக எழுதவும்.

## கலந்துரையாடு

- என்னை, என், எனக்கு என்ற சொற்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்? இந்த வசனங்களில் தேவனோடு உள்ள உறவை விளக்கும் ஒரு சிறு குறிப்பையும் தவறவிடாதீர்கள்.

- பயம், நம்பு, பற்றுதலாயிருப்பதே என்ற சொற்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இந்த மனிதன் நெருக்கத்திலிருந்தபோது என்ன செய்தான்? இதை உங்களுடைய வாழ்க்கையிலே எப்படி நடைமுறைப் படுத்துவீர்கள்?

- 9-ம் வசனத்தில் 'பிரபுக்கள்' என்ற வார்த்தை ஆட்சிசெய்பவர்களைக் குறிக்கிறது. மக்கள் தேவனைவிட ஆட்சித் தலைவர்களிடம் அதிக நம்பிக்கை வைக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? தேவனைவிட ஆட்சித் தலைவர்களிடம் அதிக பயத்துடன் மரியாதை செலுத்துகிறார்கள் என்று நினைக்கிறீர்களா? ஏன்?

- சென்ற பாடத்தில் நீங்கள் தேவனைப் பற்றிக் கற்றவைகள், தேவனைக் காட்டிலும் தலைவர்கள் நம்மைக் காப்பார்கள் மற்றும் இக்கட்டில் மீட்பார்கள் என்ற உங்களுடைய கண்ணோட்டத்தை எந்த அளவுக்கு சீரமைத்திருக்கிறது?

- இந்த உண்மைகளை அறிந்திருப்பது, உங்களுடைய நடைமுறை வாழ்க்கைக்கு எவ்வாறு உதவ முடியும்?

7. எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்.

8. மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

9. பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

## உபாகமம் 20:1-4

1. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப் போகையில் குதிரைகளையும், இரதங்களையும் உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக, உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.

2. நீங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கும்போது, ஆசாரியன் சேர்ந்து வந்து, ஜனங்களிடத்தில் பேசி:

3. இஸ்ரவேலரே, கேளுங்கள்: இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ் செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம்.

## உற்றுநோக்கு

தேவனுக்குப் பகைஞர்களாக இருக்கும் மக்களோடு போராடும்போது, பயத்தைக் கையாளும் விதம் குறித்து கற்றுக்கொள்ளக் கூடியதை இன்னும் சற்று ஆழமாக பார்ப்போம்.

**தலைவர் :** உபாகமம் 20:1-4, மற்றும் சங்கீதம் 115:9-11 வரை உள்ள வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'ஜனங்களைக்'**, குறிப்பிடும் உன், உன்னை, உன்னோடு என்ற சொற்களை அடிக்கோடிடவும்.
- **'கர்த்தர்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை முக்கோணமிடவும்.
- **பயம், கலக்கம், தத்தளிப்பு, துவள** என்கிற இடத்திலே வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **'நம்பு'**, என்று வருகிற இடத்திலே ந என்று குறிக்கவும்.

## கலந்துரையாடு

- உபாகமம் 20:1-ஐ கலந்துரையாடுங்கள். எவ்விதமான சூழ்நிலையை தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஆயத்தம் பண்ணினார்?

- ஜனங்களுக்கு அவர் கூறிய அறிவுரைகள் என்னென்ன?

- தேவனைப் பற்றிய குறிப்புக்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்? தேவனை விசுவாசிப்பதும், அவர் சொன்ன வார்த்தைகளை நம்புவதும், அவர்கள் பயப்படாமல் இருப்பதற்கு எவ்வாறு உதவி செய்யும்?

- அவர்கள் தேவனுக்கு பதிலாக யாரை நம்பினார்கள்?

- இப்போது சங்கீதம் 115:9-11-வரை பாருங்கள். கர்த்தர் என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

- இந்த வேதபகுதியில் எந்தச் சொற்றொடர் திரும்பத் திரும்ப வருகிறது? ஏன் பல முறை வருகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

- நீங்கள் உண்மையில் கர்த்தருக்குப் பயப்படுவீர்களானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஏன்?

- தேவனை நம்பலாமா? உங்களுக்கு எப்படித் தெரியும்?

*4.* உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப்போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தரென்று சொல்ல வேண்டும்.

## சங்கீதம் 115:9-11

*9.* இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு, அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

*10.* ஆரோன் குடும்பத்தாரே கர்த்தரை நம்புங்கள், அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

*11.* கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

## 2 நாளாகமம் 20:1-12

1. இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள்.

2. சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

3. அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.

4. அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள்.

## உற்றுநோக்கு

மனிதனால் வரும் பயத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு ராஜா என்ன செய்தான் என்பதை நாம் பார்ப்போம். உங்களுடைய சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கான சில பயன்பாடுகளை நீங்கள் காண்பீர்கள்.

**தலைவர் :** 2 நாளாகமம் 20:1-12 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'யோசபாத்'** மற்றும் அவனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.
- **'கர்த்தர்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை முக்கோணமிடவும்.
- **'பயம்'** என்கிற இடத்திலே வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- யோசபாத் சந்தித்த சூழ்நிலை என்ன?

- வசனம் 3-ன்படி இதைக் குறித்து அவன் எவ்வாறு உணர்ந்தான்? இது இயல்பாக உணரும் உணர்வுதானா?

- நீங்களாக இருந்திருப்பீர்களானால் எப்படி உணர்ந்திருப்பீர்கள்?

- யோசபாத் என்ன செய்தான்?

யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்.

5. அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிராகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று:

6. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீரல்லவோ தேவன், தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளகிறவர், உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.

7. எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்தக் தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு, இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய

சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா?

8. ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள்.

9. எங்கள்மேல் பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உம்முடைய நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால், நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்துநின்று, எங்கள் இடுக்கணில் உம்மைநோக்கிக் கூப்பிடுகையில், தேவரீர் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள்.

10. இப்போதும், இதோ, இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து வருகிறபோது, அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர் மலைத் தேசத்தாருடைய சீமைகள் வழியாய்ப் போக நீர் உத்தரவு கொடுக்கவில்லை, ஆகையால்

- கர்த்தர் என்று குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?.

- கர்த்தரைக் குறித்து அறிந்த இவைகள் உங்களுக்கு அல்லது மற்ற மெய்யான தேவனுடைய பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவும்?

- யோசபாத் பயப்பட்டபோது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எவ்விதமான செயல்களைச் செய்தான்?

- ஒருவரைக் குறித்து நீங்கள் பயப்படும்போது, இந்தச் சம்பவத்திலிருந்து கற்றுக்கொண்ட எதை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவீர்கள்?

அவர்களை விட்டுவிலகி, அவர்களை நாசப்படுத்தாதிருந்தார்கள்.

*11.* இப்போதும், இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி, தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறார்கள்.

*12.* எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான்.

## 2 நாளாகமம் 20:14-15,17,20

14. அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தனியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னது:

15. சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.

17. இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல, யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு

## உற்றுநோக்கு

இந்தக் கதை இன்னும் முடிந்துவிடவில்லை. அடுத்து என்ன நடந்தது என்று பார்ப்போம்.

**தலைவர் :** 2 நாளாகமம் 20:14-15,17, மற்றும் 20 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'கர்த்தர்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை ஒரு முக்கோணமிடவும்.
- **'யோசபாத்'** மற்றும் அவனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.
- **'பயப்படாமலும் கலங்காமலும்'** என்கிற சொற்களைச் சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **'நம்பு'** என்று வருகிற இடத்திலே ந என்று குறிக்கவும்.

## கலந்துரையாடு

- கர்த்தர் என்று குறித்த குறிப்புகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- 20-ம் வசனத்தில் யோசபாத் மக்களை என்ன செய்யும்படி தூண்டினான்?

- நீங்கள் பார்த்தவரை உபாகமத்தில் இதைப்போன்ற சம்பவங்கள் எவ்வாறு நிகழ்கின்றன? (மோசே ஒரு தீர்க்கதரிசியாகவும் இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனாகவும் கருதப்பட்டார்).

- எனவே, அவர்கள் யார்மீது தங்கள் நம்பிக்கையை வைக்கவேண்டும், யாருக்கு அவர்கள் பயப்படவேண்டும்? அவர்கள் கண்களால் பார்க்கும் மனிதனுக்கா அல்லது அவர்களால் பார்க்க முடியாத தேவனுக்கா?

- நடந்தவைகளையெல்லாம் படிப்பதற்குப் போதுமான நேரம் இல்லை. ஆனால் உங்களக்குத் தெரியாதா யார் வெற்றிபெற்றார்கள் என்று? நீங்கள் தேவனுக்குப் பயப்படுவதை விட்டு மனிதனுக்குப் பயப்படுவதற்கான சூழலில் அகப்படும்போது உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் என்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்?

எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்.

20. அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்.

## யோசுவா 1:1-3, 7-9

1. கர்த்தருடைய
தாசனாகிய மோசே
மரித்தபின்பு, கர்த்தர்
மோசேயின்
ஊழியக்காரனான நூனின்
குமாரன் யோசுவாவை
நோக்கி:

2. என் தாசனாகிய
மோசே
மரித்துப்போனான்,
இப்பொழுது நீயும் இந்த
ஜனங்கள் எல்லாரும்
எழுந்து, இந்த
யோர்தானைக் கடந்து,
இஸ்ரவேல் புத்திரருக்கு
நான் கொடுக்கும்
தேசத்துக்குப் போங்கள்.

3. நான் மோசேக்குச்
சொன்னபடி உங்கள்
காலடி மிதக்கும்
எவ்விடத்தையும்
உங்களுக்குக்
கொடுத்தேன்.

7. என் தாசனாகிய
மோசே உனக்குக்
கற்பித்த
நியாயப்பிரமாணத்தின்படி
யெல்லாம் செய்யக்
கவனமாயிருக்கமாத்திரம்
மிகவும் பலங்கொண்டு
திடமனதாயிரு.

## உற்றுநோக்கு

நாம் மனிதனுக்குப் பயப்படுவதைவிட தேவனுக்குப் பயந்து நடக்கிறோமா என்பதை நாம் எவ்வாறு உறுதி செய்ய முடியும் என்பதைப் பார்ப்போம்.

**தலைவர் :** யோசுவா 1:1-3, 7-9 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'யோசுவா'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களின் அருகில் **யோ** என்று குறிக்கவும்.
- **பயத்தைக்** குறிக்கின்ற எந்த சொல்லையும் வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **நியாயப்பிரமாணம்** மற்றும் அதைக் குறிக்கும் சொற்களை கட்டமிடவும்.
- **பலங்கொண்டு திடமதையாயிரு** என்ற சொற்களை மேகம் போன்று குறிக்கவும்



## கலந்துரையாடு

- 'யோசுவா' என்று அடையாளமிட்ட இடங்களையெல்லாம் பாருங்கள். கர்த்தர் அவனுக்கு என்னென்ன அறிவுரைகள் கொடுத்தார்?

- யோசுவாவின் இதயத்தில் தைரியம் உண்டாகும் விதத்தில் தேவன் அவனிடம் என்ன சொன்னார்?

## உட்கருத்து

யோசுவா 1–ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெயச் சொற்களுக்கான விளக்கம் தேவன் சொன்னவைகளைக் குறித்த ஒரு தெளிவான மற்றும் நினைவில் நீங்காது வைக்கக்கூடிய வார்த்தையின் வரைபடமாக இருக்கிறது.

பலங்கொண்டு என்பதின் பொருள் "வலிமைவாய்ந்த, உறுதியான, பலமான" என்பதாகும்.

திடமானதாயிரு என்பதின் பொருள் "உடலாலும், மனதாலும் மிகவும் கவனமாக இரு, தைரியத்தை இழந்துவிடாதே, மனம் தளர்ந்துவிடாதே".

திகையாதே என்பதின் பொருள் "கலகச்சூழல் (போர்) வரும்போது குழப்பமோ பயமோ அடையாதே" என்பதாகும்.

விலகு என்றால் "தளர்ந்துபோதல் பலவீனமாகுதல் மற்றும் செய்யாது விட்டுவிடுதல்".

கைவிடு என்பதின் பொருள் "நிரந்தரமாக விட்டுவிடுதல், துறத்தல்" இதுவும் விலகுதல் என்ற பொருளையே தருகிறது.

'நியாயப்பிரமாணப் புஸ்தகம்' என்பது தோரா எனப்படும், இது வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் முறையே: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்பதாகும். ஒவ்வொரு அரசனும் தனக்கென்று நியாயப்பிரமாணத்தின் ஒரு நகலை எழுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

- நியாயப்பிரமாணம் மற்றும் நியாயப்பிரமாண புஸ்தகம் என்பதைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

நீ போகும்
இடமெல்லாம்
புத்திமானாய் நடந்து
கொள்ளும்படிக்கு,
அதைவிட்டு வலது
இடதுபுறம்
விலகாதிருப்பாயாக.

8. இந்த
நியாயப்பிரமாண
புஸ்தகம் உன்
வாயைவிட்டுப்
பிரியாதிருப்பதாக; இதில்
எழுதியிருக்கிறவைகளின்
படியெல்லாம் நீ செய்யக்
கவனமாயிருக்கும்படி,
இரவும் பகலும் அதைத்
தியானித்துக்
கொண்டிருப்பாயாக;
அப்பொழுது நீ உன்
வழியை
வாய்க்கப்பண்ணுவாய்,
அப்பொழுது
புத்திமானாயும் நடந்து
கொள்ளுவாய்.

9. நான் உனக்குக்
கட்டளையிடவில்லையா?
பலங்கொண்டு
திடமனதாயிரு;
திகையாதே, கலங்காதே,
நீ போகும் இடமெல்லாம்
உன் தேவனாகிய கர்த்தர்
உன்னோடே இருக்கிறார்
என்றார்.

- நியாயப்பிரமாண புஸ்தகத்தின் மீது கவனத்தைச் செலுத்துவது யோசுவாவின் விருப்பம் என்று தேவன் ஆலோசனை சொன்னாரா?

- இந்த வேதபகுதியின்படி, தேவனுக்குப் பயப்படுதல் மற்றும் மனிதனுக்குப் பயப்படுதல் என்று வரும்போது தேவனுடைய வார்த்தை எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

- 2 நாளாகமம் 20-ம் அதிகாரத்தில், யோசபாத்துக்கு தேவனைக் குறித்த அறிவு, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் அவன் மக்களுக்குச் சொன்ன அறிவுரைகள் ஆகியவற்றிலிருந்த நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? (யோசுவாவுக்கும், யோசபாத்துக்கும் வேதாகமத்தின் ஐந்து புத்தகங்கள், (தோரா) மட்டுமே இருந்தன. உங்களுக்கு அறுபத்தாறு புத்தகங்கள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!)

- தேவனுடைய வார்த்தையின் மீது உங்களுடைய மனநிலை என்னவாக இருக்கிறது? அது உங்கள் செயல்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தியிருக்கிறது மற்றும் உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளை எவ்வாறு சந்திக்கும்படி செய்திருக்கிறது?

- தேவனுடைய வார்த்தை உங்களுடைய அனுதின வாழ்க்கையில் எந்த இடத்தைப் பிடித்திருக்கிறது? யோசுவா 1:8-ல் தேவன் யோசுவாவுக்குக் கொடுக்கும் அறிவுரை எவ்வாறு இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது?

- மனிதனுக்கு பயப்படுவதினால் வரும் சிக்கலிலிருந்து தப்பிட தேவனுடைய வார்த்தையாகிய அறிவு உங்களுக்கு உதவின நேரத்தை விளக்கவும். அப்படி ஒன்றை உங்களால் நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை என்றால் அது எதை உங்களுக்கு வெளிப்படுத்துகிறது?

## உற்றுநோக்கு

யோசுவா 1:7-9 வசனங்களை, உங்களுடைய இதய வீட்டினுள் கொண்டுவருவதற்கு உதவும் மூன்று வேத பகுதிகளைப் புதிய ஏற்பாட்டிலிருந்து பார்த்துவிட்டு இந்த வாரத்தின் பாடத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம்.

**தலைவர் :** யோவான் 16:33, எபிரெயர் 13:5-6, மற்றும் எபேசியர் 6:10-11 வசனங்களை சத்தமாக வாசியுங்கள் குழுவினர்...

- **இயேசுவைக்** குறிக்கும் ஒவ்வொரு சொல்லிலும் சிலுவையை வரையவும். ✝
- **கர்த்தர்** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை முக்கோணமிடவும்.
- **சீஷர்கள்** அல்லது செய்தியைப் பெறும் விசுவாசிகள் பற்றிய குறிப்புக்களை அடிக்கோடிடவும்.
- **'பயப்படேன்'** என்கிற சொல்லை சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **திடன் கொள்ளுங்கள், பலப்படுங்கள்** என்று வருகிற இடத்தில் மேகம்போன்ற படத்தை வரையவும்.

### யோவான் 16:33

என்னிடத்தில்
உங்களுக்குச் சமாதானம்
உண்டாயிருக்கும்
பொருட்டு இவைகளை
உங்களுக்குச்
சொன்னேன். உலகத்தில்
உங்களுக்கு உபத்திரவம்
உண்டு, ஆனாலும்
திடன்கொள்ளுங்கள்;
நான் உலகத்தை
ஜெயித்தேன் என்றார்.

### எபிரெயர் 13:5-6

5. நீங்கள் பண
ஆசையில்லாதவர்களாய்
நடந்து, உங்களுக்கு
இருக்கிறவைகள்
போதுமென்று
எண்ணுங்கள். நான்
உன்னைவிட்டு
விலகுவதுமில்லை,
உன்னைக்
கைவிடுவதுமில்லை
என்று அவர்
சொல்லியிருக்கிறாரே.

*6.* அதினாலே நாம் தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.

## எபேசியர் 6:10-11

*10.* கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

*11.* நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

## கலந்துரையாடு

- கர்த்தர் என்ற குறிப்புகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- திடன்கொள்ளுங்கள், பலப்படுங்கள் ஆகிய குறிப்புகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- உட்கருத்துப் பெட்டியில் கொடுக்கப்பட்டுள்ளதை மறுபடியும் ஆய்வு செய்யுங்கள். உங்களின் வசதிக்காக அடுத்த பக்கத்தில் திரும்பவும் அது அச்சிடப்பட்டிருக்கிறது. யோசுவாவிலும் புதிய ஏற்பாட்டிலும் வசனங்களைப் படித்ததிலிருந்து இந்த வார்த்தைகள் எந்த அளவுக்குப் புரிந்திருக்கிறது என்பதையும், மனிதனுக்குப் பயப்படுவதைவிட தேவனுக்குப் பயப்படும் பயத்தில் நடப்பதற்கு எவ்வாறு உதவி செய்யும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

## உட்கருத்து

யோசுவா 1-ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெயச் சொற்களுக்கான விளக்கம் தேவன் சொன்னவைகளைக் குறித்த ஒரு தெளிவான மற்றும் நினைவில் நீங்காது வைக்கக்கூடிய வார்த்தையின் வரைபடமாக இருக்கிறது.

பலங்கொண்டு என்பதின் பொருள் ''வலிமைவாய்ந்த, உறுதியான, பலமான'' என்பதாகும்.

திடமானதாயிரு என்பதின் பொருள் "உடலாலும், மனதாலும் மிகவும் கவனமாக இரு, தைரியத்தை இழந்துவிடாதே, மனம் தளர்ந்துவிடாதே".

திகையாதே என்பதின் பொருள் "கலகச்சூழல் (போர்) வரும்போது குழப்பமோ பயமோ அடையாதே" என்பதாகும்.

விலகு என்றால் ''தளர்ந்துபோதல் பலவீனமாகுதல் மற்றும் செய்யாது விட்டுவிடுதல்".

கைவிடு என்பதின் பொருள் "நிரந்தரமாக விட்டுவிடுதல், துறத்தல்" இதுவும் விலகுதல் என்ற பொருளையே தருகிறது.

- இறுதியாக பண ஆசை உங்களை அல்லது மற்றவர்களை தேவனுக்குப் பயப்படுவதிலிருந்து எவ்வாறு விலக்கிவைக்கும்? இன்றைக்கு இது ஓர் பிரச்சனையாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அதைக் குறித்து குழுவில் உள்ளவர்களிடம் கலந்துரையாடுங்கள்.

## சுருக்கவுரை

நம் ஒவ்வொருவருடைய வாழ்நாள் முழுவதிலும் மனிதனுக்குப் பயப்படும் பயத்தை எதிர்கொள்வதும், அதைக் கையாள்வதும் நடந்துகொண்டே இருக்கும். மனிதனால் உண்டாகும் எல்லாவிதமான பயங்களையும் ஒரே ஒரு பயம்தான் மேற்கொள்ள முடியும், அது கர்த்தருக்குப் பயப்படும் பயம்தான். இதன் பொருள் என்னவென்றால் நாம் தொடர்ந்து அவருடைய பலத்திலும், அவரைப் புரிந்துகொள்வதிலும் புதுப்பித்துக்கொண்டே இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

அதை எவ்வாறு செய்வது என்பதற்கான மூன்று ஆலோசனைகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது, தேவனுடைய வார்த்தையை அனுதினமும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை ஏதோ ஒரு கடமைக்காக செய்வது போல் அல்ல. ஏனென்றால் அவருடைய வாயினின்று வருகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நாம் பிழைக்கின்றோம். (உபாகமம் 8:3, மத்தேயு4:4). தேவனுடைய வார்த்தையை ஆழமாக நீங்களாகவே "பகுத்தாராய்ந்து" கற்றுக்கொள்ளுங்கள், அப்போது சங்கீதம் 119:102 சொல்லுகிறபடி தேவன்தாமே உங்களுக்குக் கற்றுக் கொடுப்பார். பிரிசெப்ட் மினிஸ்ட்ரி இன்டர்நேஷனல் (Precept ministries International) ஊழியமானது மக்களை தேவனுடைய வார்த்தையிலே நிலைநாட்டும்படி செய்வதுதான். இது தேவனிடத்திலே பயபக்தியை, தேவனுக்குப் பயப்படும் பயத்தை உண்டாக்குகிறது. இந்த ஊழியத்தில் வேதாகமத்தின் உண்மைகளை நீங்களாகவோ அல்லது மற்றவர்களோடு சேர்ந்து இன்னும் ஆழமாக ஆராய்ந்து கண்டுகொள்வதின் மூலமாகவோ சீர்களை உருவாக்கவும், வலைத்தளம் மற்றும் அச்சிடப்பட்ட புத்தகங்களினால் கற்றுக்கொடுப்பதற்கும், பயிற்சியளிப்பதற்கும் தேவையான அனைத்து உபகரணங்களும் இருக்கின்றன. இந்த PMI ஊழியம் 150 நாடுகளில் நடைபெறுகிறது. 70 மொழிகளில் சிறுவர்களுக்கு, வயதுவந்தோருக்கு, வயது முதிர்ந்தவர்களுக்கென்று உபகரணங்கள் இருக்கின்றன. நீங்கள் உபயோகப்படுத்தும் இந்தப் புத்தகமும் இந்த ஊழியத்தினால் உருவாக்கப்பட்டதுதான். (இன்னும் அதிமான தகவல்களுக்கு : www.preceptindia.org பாருங்கள்).

இரண்டாவதாக, நீங்கள் அதிகமாக கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைத் தெரிந்து கொள்ளும்போது, அவரில் விசுவாசம் வைத்து அவர் சொல்லுவதைச் செய்யும்போது உங்களுடைய சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், நீங்கள் ஆவிக்குரிய நிலையிலே மிகவும் உறுதியானவராகிவிடுவீர்கள். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் நடப்பது ஒரு உள்ளார்ந்த அமைதியையும், நீங்கள் இன்னும் அதிகமதிகமாய் வாஞ்சிக்கும் தேவனுடைய இரக்கத்தையும் கொண்டுவரும்.

மூன்றாவதாக, உங்களுக்கு உதவிடும் மற்றும், தேவைப்பட்டால் உங்களின் தவறுகளிலிருந்து நல்வழிப்படுத்தும் விசுவாசத்தில் உறுதியான மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளுங்கள். தேவன் நம்மை ஒரே சரீரமாக இணைத்துவைத்திருக்கிறார், ஏனென்றால் நாம் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பது அவசியம். “முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது,” (பிரசங்கி 4:12) அடுத்த வாரத்தில் மரண பயத்தை நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மையை, எவ்வாறு பலத்தோடும், திடமனதோடும் எதிர்கொள்வது என்று பார்ப்போம்.

*அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும், சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார். (ஏசாயா 8:12-14)*

## வாரம் ஐந்து

மரணத்தைக் குறித்த பயம் ஒரு வல்லமையான உந்து சக்தியாயிருக்கிறது. தங்களுடைய பலத்தினாலும், அச்சுறுத்தலினாலும் மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்துகிறவர்கள், தங்களுடைய விருப்பத்திற்கு இணங்க மறுக்கும் நபர்களுக்கு பயன்படுத்துவது மரண அச்சுருத்தல் ஆகும். இது அவர்கள் எடுக்கும் இறுதி ஆயுதமாகும். அது ஒருவனைப் பயத்தால் ஆட்கொண்டு முடக்கி மண்டியிடவைத்துவிடும். அவன் தன்னுடைய நம்பிக்கைகளை மறுக்கும்படி செய்துவிடும் மற்றவர்களை அவன் காட்டிக்கொடுப்பதற்கும் சம்மதிக்க வைத்துவிடும்.

ஆனால் இந்த பயத்திற்கு அனைவரும் ஆளாவதில்லை. தங்கள் நம்பிக்கையில் உறுதியாயிருப்பவர்கள் மற்றும் தைரியமுள்ளவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்காக சாவதற்கும் ஆயத்தமாக இருப்பர். சரித்திரத்தின் பதிவேடுகள் இரத்தச்சாட்சியாய் மரித்தவர்களே திருச்சபைக்கு விதைகளாக இருந்தனர் என்று நமக்குச் சொல்லுகிறது. விசுவாசிகளை வேரோடு அழிப்பதற்குப் பதிலாக துன்புறுத்தப்படுதல் மற்றும் இரத்தச் சாட்சியாக மரித்தல் ஆதித் திருச்சபையின் வேகமான வளர்ச்சிகே காரணங்களாயிருந்தன!

கிறிஸ்தவர்கள் விசுவாசித்திற்காக துணிச்சலுடன் சாவதற்கு ஆயத்தமாயிருந்ததின் காரணம் என்ன? இயேசு கிறிஸ்துவையும் வாழ்வுக்கான அவருடைய கட்டளைகளையும் மறுதலிக்காமல், விசுவாசத்திற்காக மரிப்பதற்கு அவர்களுக்கு பெலத்தையும் தைரியத்தையும் தந்தது எது?

ஜீவன் மேலும் மரணத்தின் மேலும் ஆளுகைசெய்யும் அதிகாரமுள்ள தேவனுக்கு நாம் பயந்து நடக்கும்போது, மரணபயத்தை எளிதாக ஜெயிக்க முடியும் என்பதை இந்தப் பாடத்தில் பார்க்கப் போகிறோம்.

## உற்றுநோக்கு

ஆரம்பங்களின் புத்தகமான ஆதியாகமத்தில் மரணத்தைக் குறித்தும், மற்றும் பயப்படுவது குறித்தும் முதற்குறிப்பை நாம் பார்க்கிறோம், தேவன் ஆதாமையும் ஏவாளையும் படைத்தபோது அவர்களை ஒரு மிகச்சிறந்த சூழ்நிலையில் வைத்தார் மற்றும் ஒன்றே ஒன்றை மட்டும் செய்யக்கூடாது என்று தடைவிதித்தார். அது நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்பதுதான், தேவன் தான் சொன்னதை மீறினால் என்ன நிகழும் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தார். ஆனால்

**ஆதியாகமம் 2:16-17: 3:7-10**

*16. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.*

*17. ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்;*

அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

3:7 அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.

8. பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.

9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.

பிசாசு என்று அழைக்கப்படும் சர்ப்பத்தின் தூண்டுதலினால் சாப்பிடக்கூடாது என்று சொல்லப்பட்ட பழத்தை ஏவாள் சாப்பிட்டாள். பின்னர் ஆதாமுக்கும் கொடுத்தாள், அவனும் அதைச் சாப்பிட்டான்.

**தலைவர் :** ஆதியாகமம் 2:16-17, மற்றும் 3:7-10 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **தேவனாகிய கர்த்தர்** என வருமிடங்களில் ஒரு முக்கோணத்தை வரையவும். 
- **"சாவாய்"** என்ற வார்த்தையின் மீது ஒரு கல்லறைத்தூண் போல வரையவும் 
- **'பயந்து'** என்கிற இடத்தில் வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும் 

## கலந்துரையாடு

- தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் 'சாவாய்' என்ற முதல் குறிப்பைக் குறித்ததின் மூலம் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- சாவினால் என்ன நிகழும் என்பதை தவறாமல் குறிப்பிடுங்கள்? அதை ஒரே வார்த்தையினால் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

- தேவனுக்கு விரோதமாகக் கீழ்ப்படியாமல் போனபோது ஆதாமும் ஏவாளும் என்ன செய்தார்கள்?

## உற்றுநோக்கு

பாவம் மரணத்தைக் கொண்டுவருகிறது, ஜீவனாயிருக்கிற தேவனிடமிருந்து நம்மைப் பிரிப்பது எது?

**தலைவர் :** ரோமர் 5:12 மற்றும் 6:23 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- '**பாவம்**' என்கிற வார்த்தையை '**பா**' என்று பெரிதாகி எழுதி குறிப்பிடவும்.
- '**மரணம்**' என்ற வார்த்தையின் அருகில் கல்லறைத்தூண் போல வரையவும்.
- '**தேவன்**' என வருமிடத்தில் முக்கோணமிடவும்

## கலந்துரையாடு

- 'மரணம்' என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- 'தேவன்' என்று குறியிட்டதிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

*10. அதற்கு அவன்:* நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து, ஒளிந்துக்கொண்டேன் என்றான்.

### ரோமர் 5:12

இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.

### ரோமர் 6:23

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

## எபிரெயர் 2:9,14,15

*9.* என்றாலும்,
தேவனுடைய
கிருபையினால்
ஒவ்வொருவருக்காகவும்,
மரணத்தை
ருசிபார்க்கும்படிக்கு
தேவதூதரிலும் சற்றுச்
சிறியவராக்கப்பட்டிருந்த
இயேசு மரணத்தை
உத்தரித்ததினிமித்தம்
மகிமையினாலும்
கனத்தினாலும்
முடிசூட்டப்பட்டதைக்
காண்கிறோம்.

*14.* ஆதலால்,
பிள்ளைகள்
மாம்சத்தையும்
இரத்தத்தையும்
உடையவர்களாயிருக்க,
அவரும்
அவர்களைப்போல
மாம்சத்தையும்
இரத்தத்தையும்
உடையவரானார்.
மரணத்துக்கு
அதிகாரியாகிய
பிசாசானவனைத் தமது
மரணத்தினாலே
அழிக்கும்படிக்கும்.

*15.* ஜீவகாலமெல்லாம்
மரண பயத்தினாலே
அடிமைத்தனத்திற்குள்ளா
னவர்கள் யாவரையும்
விடுதலைபண்ணும்
படிக்கும் அப்படியானார்.

## உற்றுநோக்கு

எனவே, நித்திய ஜீவன் எவ்வாறு இயேசு கிறிஸ்து மூலமாக வருகிறது? பாவத்தில் பிறந்ததினால் மரணத்திற்குப் பாத்திரமான, தேவனிடத்திலிருந்து நித்திய நித்தியமாகப் பிரிந்தவர்களான ஜனங்களுக்கு, நித்திய ஜீவனுள்ள தேவன் எவ்வாறு ஜீவனைத் தர முடியும்?

**தலைவர் :** எபிரெயர் 2:9, 14-15 மற்றும் 2 கொரிந்தியர் 5:21 ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- '**இயேசு**' மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.
- '**மரணம்**' என்ற வார்த்தையின் மீது ஒரு கல்லறைத்தூண் போல வரையவும்.
- '**பயம்**' என்கிற சொல்லைச் சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- இயேசுவைப் பற்றிய குறிப்பைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? இது மிகவும் அற்புதமானதாக இருக்கிறதல்லவா? இது உங்களுக்கே உரியது, ஆகையால் ஒன்றையும் தவற விடாதீர்கள்?

- இயேசு தேவதூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவராக, மாம்சமும் இரத்தமும் உடைய மனிதனாக அவதரித்தவர் என்று தேவன் ஏன் அழுத்தமாகக் கூறுகிறார்?

## 2 கொரிந்தியர் 5:21

நாம் அவருக்குள் (இயேசு) தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை (இயேசு) நமக்காகப் பாவமாக்கினார்.

- ஆதியாகமம் 3-ல் பாவம் செய்தது யார்? அந்த பாவத்தினால் உண்டான விளைவு என்ன? ரோமர் 5:12-ல் நீங்கள் பார்ப்பது என்ன? இதை மறுசீராய்வு செய்யவும்.

- எபிரெயரில் மரணத்தைக் குறித்த குறிப்பை குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- ரோமர் 6:23-ல் நீங்கள் காண்கிறபடி எது மரணத்தைக் கொண்டுவருகிறது?

- எபிரெயர் 2:14-ல் விளக்கப்பட்டபடி, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசு என்ற சர்ப்பம் மனிதன்மேல் என்ன கொண்டு வந்தான்?

- மனிதனின் பாவம் எவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விலைக்கிரயம் செலுத்தப்பட்டது?

- ஆக, நீங்கள் இயேசுவின் உண்மையான விசுவாசியாக இருந்தால், நீங்கள் தேவனுக்குப் பயப்படுகிறவராகவும் இயேசுவை விசுவாசிக்கிறவராகவும், இருந்தால் நீங்கள் என்னவிதமான வாழ்க்கை வாழ்வீர்கள்? நீங்கள் எப்போதாவது தேவனைவிட்டும் இயேசு கிறிஸ்துவைவிட்டும் பிரிக்கப்பட்டிப்பீர்களா? விளக்கமான பதில் கூறுங்கள்?

## 1 யோவான் 5:11-13

11. தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.

12. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

13. உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 5:11-13, வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'நித்திய ஜீவன்'**, **'ஜீவன்'** ஆகிய வார்த்தைகளைச் சுற்றிலும் வட்டமிடவும்.
- **'அவருடைய குமாரன்', தேவனுடைய குமாரன்,** என்ற சொற்களை † சிலுவை அடையாளத்தால் குறியிடவும்.
- **'ஜீவன் இல்லாதவன்'** என்ற சொற்றொடர் மீது ஒரு கல்லறைத்தூண் போல வரையவும்.

## கலந்துரையாடு

- தேவன் நமக்கு என்ன கொடுத்திருக்கிறார்? அதை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்கிறோம்?
- தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்குள் கொண்டிராதிருந்தால் நம்முடைய நிலை என்ன?

## உற்றுநோக்கு

ஒரு கிறிஸ்தவ ஆண் அல்லது பெண்ணின் உடல் மரித்துப்போகுமானால் என்ன நடக்கும்? தேவனுடைய ஏவுதலினாலே அப்போஸ்தலனாகிய பவுல் என்ன எழுதுகிறார் என்பதைப் பார்ப்போம்.

**தலைவர் :** பிலிப்பியர் 1:21-23, 2 கொரிந்தியர் 5:6-8, மற்றும் ரோமர் 8:38-39 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- பவுல் மற்றும் உடன் விசுவாசிகளைக் குறிப்பிடும் எனக்கு, **என், நான், நாம், நம்மை, நம்முடைய** என்ற வார்த்தைகளை அடிக்கோடிடவும்.
- **சாவு, தேகத்தைவிட்டுப் பிரிந்து, தேகத்தை விட்டுக் குடிபோகவும், மரணம்** என்ற சொற்களின் மீது கல்லறைத்தூண் போல வரையவும்.

## கலந்துரையாடு

- எனக்கு, என், நான், நாம், நம்மை, நம்முடைய ஆகியவற்றைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

### உட்கருத்து

**ரோமாபுரிச் சிறையில் இருக்கும்போது பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை பவுல் எழுதினார். தேவனுக்குப் பயந்தவராக வாழ்ந்த இவர் இறுதியில் விசுவாசத்திற்காக தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.**

### பிலிப்பியர் 1:21-23

*21. கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.*

*22. ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்து கொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.*

*23. ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன், தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்.*

### 2 கொரிந்தியர் 5:6-8

*6. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.*

7. இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கி றோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்.

8. நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

## ரோமர் 8:38-39

38. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

39. உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

- சாவு, தேகத்தைவிட்டுப் பிரிந்து, தேகத்தை விட்டுக் குடிபோகவும், மரணம் என்ற வார்த்தைகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இதைக் குறித்து உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா? இந்த உண்மை கிறிஸ்தவர்களின் மரணம் குறித்த உங்கள் கண்ணோட்டத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது?

- தேவனுக்குப் பயப்படும் பயமானது அவர் வார்த்தையின் உண்மைகளை ஏற்றுக்கொள்வதும் அதன்படி வாழ்வதுமாகும். இந்த உண்மை உங்களின் வாழ்க்கை மற்றும் மரணத்தை எவ்வாறு பாதிக்கும்? 2 கொரிந்தியர் 5:7-8ல் காண்கிறபடி எவ்வாறு தைரியமாக மரணத்தைச் சந்திக்க முடியும்?

## உற்றுநோக்கு

நீங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவராக இருப்பதால் மற்றவர்களின் கைகளினால் உங்களுக்கு மரணம் உண்டாகாது என்று பொருளா?

**தலைவர் :** லூக்கா 12:4-7 மற்றும் மத்தேயு 10:26-28 வசனங்களை சத்தமாகவும், நிதானமாகவும் வாசியுங்கள். இந்த இரண்டு வேதபகுதிகளிலும் இயேசு பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள். குழுவினர்...

- **'பயம்'** என்கிற சொற்களைச்சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **கொலை, கொல், அழிக்கிற** போன்ற வார்த்தையின் மீது ஒரு கல்லறைத்தூண் போல வரையவும்.

## கலந்துரையாடு

- 'பயம்' என்ற சொற்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- நீங்கள் யாருக்குப் பயப்படவேண்டும், ஏன்?

### லூக்கா 12:4-7

4. என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன். சரீரத்தைக் கொலை செய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

5. நீங்கள் இன்னாருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம் அவருக்கே பயப்படுங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

6. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.

7. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

## மத்தேயு 10: 26-28

26. அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை.

27. நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின் மேல் பிரசித்தம்பண்ணுங்கள்.

28. ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

- இப்படிப்பட்ட அறிவு உங்களுக்கு என்ன பொருளைத் தருகிறது? நீங்கள் உண்மையாக விசுவாசித்தால், மற்றும் அதன்படி வாழ்ந்தால், உங்களுடைய வாழ்க்கை, ஊழியம், வேலை, உங்களுடைய செய்தி, மற்றவர்களுக்கு முன்பாக உங்களுடைய சாட்சி ஆகியவற்றில் இது எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்க முடியும்?

- தங்களுடைய விசுவாசத்திற்காக மரணமடைந்தவர்களைப் பற்றித் தெரியுமா? அல்லது படித்திருக்கிறீர்களா? அது உங்களிடத்திலே எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## உற்றுநோக்கு

நாம் எப்போது மரணமடைவோம் என்று யார் தீர்மானிப்பது? அல்லது இது தற்செயலாக நடக்குமா?

**தலைவர் :** சங்கீதம் 139:16 மற்றும் உபாகமம் 32:39 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'தேவனை'**க் குறிப்பிடும் சொற்களின் அருகில் ஒரு முக்கோணத்தை வரையவும்.
- **'கொல்'** என்ற வார்த்தையின் அருகில் கல்லறைத்தூண் போல வரையவும்.

## கலந்துரையாடு

- தேவனைப்பற்றிய குறிப்புகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- யார் உங்களுடைய மரணத்தை தீர்மானிப்பது அது எப்போது நடைபெறும் என்பதைக் குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- சற்று முன்பு நீங்கள் வாசித்ததை விசுவாசிப்பது எவ்வாறு மரணபயத்தைக் கையாள்வதற்கு உங்களுக்கு உதவும்?
- அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கவில்லையென்றால் நீங்கள் தேவனுக்குப் பயப்படுகிறீர்களா? விசுவாசிக்கவில்லையென்றால் முடிவில் என்ன நடக்கும்? உங்களின் பதிலை விளக்குங்கள்.

### சங்கீதம் 139:16

(சங்கீதக்காரன் தேவனைக்குறித்துச் சொல்கிறான்).

என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

### உபாகமம் 32:39

(தேவன் பேசுகிறார்.)

நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன்; நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை.

## வெளிப்படுத்தல் 2:8-11

*8. சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது:*

*9. உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.*

*10. நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்; ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.*

## உற்றுநோக்கு

வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்கள் ஆசியாவில் உள்ள ஏழு சபைகளுக்கான இயேசுவின் ஏழு கடிதங்களை உள்ளடக்கியிருக்கின்றன. ஒவ்வொரு கடிதத்தின் இறுதியிலும் வெற்றி பெறுகிறவர்களுக்கான ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**தலைவர் :** வெளிப்படுத்தின விசேஷம் 2:8-11 வரை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- இயேசுவைக் குறிக்கும் **முந்தினவர் பிந்தினவர்**, என்ற சொல்லை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.
- விசுவாசிகளைக் குறிக்கும் **உன், நீ, நீங்கள், உங்களில், உனக்கு** ஆகியவற்றை அடிக்கோடிடவும்.
- **பயப்படாதே** என்ற வார்த்தையின் மீது வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **மரித்து, மரணம்** என்னும் சொல்லின் மேல் ஒரு கல்லறைத்தூண் போல வரையவும்.

## உட்கருத்து

**1 யோவான் 5: 4-5 வசனங்களின்படி, ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவன் தேவனால் பிறந்தவன், அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறான். அவர்களுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கிறது.**

## கலந்துரையாடு

- எவ்விதமான செய்தியை இயேசு கிறிஸ்து சிமிர்னா சபைக்குக் கொடுத்தார்? இது கடினமானதா? எளிமையானதா? அதிர்ச்சி தரக்கூடியதா? பயம் உண்டாக்கத்தக்கதா? ஏன் என்று நீங்கள் விளக்க முடியுமா?

- உன், நீ, நீங்கள், உங்களில், உனக்கு என்ற சொற்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? உங்களுடைய பதில் மிகவும் தெளிவாக இருக்கட்டும்.

- வசனம் 8-ல் இயேசு கிறிஸ்து தன்னை எப்படி விவரிக்கிறார்?

- சபையினிடத்தில் அவர் சொல்வதற்கும், இந்த விளக்கத்திற்கும் ஏதாவது தொடர்பு இருப்பதை நீங்கள் காண்கிறீர்களா? உங்களின் பதிலை விளக்கவும்.

- மரணத்தைப் பற்றிய குறிப்பை குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

(இரண்டாவது மரணம் என்பதின் பொருளைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்களானால், கொஞ்சம் பொறுங்கள் நாம் சேர்ந்து அதற்கான பதிலைப் பார்ப்போம்).

*11. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்: ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.*

**வெளிப்படுத்தல் 1:12-13, 17-18**

*12. அப்பொழுது (நான்) என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன், திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,*

*13. அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவரையும் கண்டேன்.*

*17. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன், அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி : பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கி றேன்.*

*18. மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.*

## உற்றுநோக்கு

சிமிர்னா சபையினிடத்தில் பேசினவரைக் குறித்து இன்னும் ஒருமுறை நாம் பார்ப்போம். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தேவனுடைய வார்த்தையின் உண்மையான சாட்சியாகவும் இருந்த காரணத்தினால் கொடுமைப்படுத்தப்பட்டு பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டு ஆவிகுள்ளானபோதும் தரிசனத்தில் அவர் யோவானுக்குத் தோன்றினார். இங்கே "நான்" என்று யோவான் தன்னைக்குறித்துக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். (இயேசு கிறிஸ்துவும் தன்னைக் குறித்து நான் என்று 17-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார்)

**தலைவர் :** வெளிப்படுத்தின விசேஷம் 1:12-13, 17-18 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **'மனுகுமாரனுக்கு ஒப்பானவர்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.
- **'பயப்படாதே'**, என்கிற சொல்லை வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.
- **'மரித்தேன்' 'மரணம்'** என்ற வார்த்தையின் மீது ஒரு கல்லறைத்தூண் வரையவும்.

## கலந்துரையாடு

- வசனங்கள் 17-18-ல், யோவான் கண்டவரைக் குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இது யாராக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஏன்?

- நாம் ஏன் பயப்படவேண்டியதில்லை? திரும்பவும் மரணத்தைக்குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

மரணத்திற்கு ஒரு முடிவு உண்டா? பூமியில் இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருட அராட்சிக்குப்பின் என்ன நடக்கும் என்பதை யோவானின் தீர்க்கதரிசனத்தில் நாம் பார்ப்போம்.

**தலைவர் :**வெளிப்படுத்தின விசேஷம் 20:11-21:8 வரை வசனங்களை நிதானமாக வாசியுங்கள். குழுவினர்....

- '**தேவன்**' மற்றும் அவரைக் குறிக்கும் வீற்றிருக்கிறவர், அவருடைய, அவர், மற்றும் நான் என்ற சொற்களை முக்கோணத்தால் குறியிடவும்.
- '**மரித்தோர்**', '**மரணம்**' போன்ற வார்த்தைகளின் மீது ஒரு கல்லறைத்தூண் வரையவும்.

## கலந்துரையாடு

- தேவனைக் குறித்த குறிப்புக்களை வெளிப்படுத்தல் 20:12-14 வரை உள்ள வசனங்களில் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

ஆமென், நான்
மரணத்திற்கும்
பாதாளத்திற்குமுரிய
திறவுகோல்களை
உடையவராயிருக்கிறேன்.

**வெளிப்படுத்தல் 20:11-15, 21:1-8**

*11.* பின்பு, நான்
பெரிய வெள்ளைச்
சிங்காசனத்தையும்
அதின்மேல்
வீற்றிருக்கிறவரையும்
கண்டேன், அவருடைய
சமுகத்திலிருந்து பூமியும்
வானமும்
அகன்றுபோயின,
அவைகளுக்கு
இடங்காணப்படவில்லை.

*12.* மரித்தோராகிய
சிறியோரையும்
பெரியோரையும்
தேவனுக்கு முன்பாக
நிற்கக்கண்டேன்;
அப்பொழுது புஸ்தகங்கள்
திறக்கப்பட்டன;
ஜீவபுஸ்தகம் என்னும்
வேறொரு புஸ்தகமும்
திறக்கப்பட்டது,
அப்பொழுது அந்தப்
புஸ்தகங்களில்
எழுதப்பட்டவைகளின்
படியே மரித்தோர் தங்கள்
தங்கள்
கிரியைகளுக்குத்தக்கதாக
நியாயத்தீர்ப்படைந்தார்கள்

*13.* சமுத்திரம்
தன்னிலுள்ள மரித்தோரை
ஒப்புவித்தது; மரணமும்
பாதாளமும் தங்களிலுள்ள

மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்

*14.* அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

*15.* ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

*21:1* பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

2. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக

- வெளிப்படுத்தல் 20:11-15 வசனங்களில் மரித்தோர், மரணம் என்ற வார்த்தைகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- ஒரு நிமிடம் நாம் சிந்திப்போம். நீங்கள் சிமிர்னா சபையைப்பற்றிப் படித்ததிலிருந்து, தேவனுடைய மக்களைத் துன்பப்படுத்திக் கொன்றவர்கள் எல்லோரும் தங்களுக்கு வரும் தண்டனையிலிருந்து தப்பிக்கொள்வார்களா? உங்களுக்கு எப்படித் தெரியும்?

- வெளிப்படுத்தல் 21:1-8 வசனங்களில் தேவனைக் குறித்துக் குறித்தவைகளில் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இந்த வேதபகுதியில் மரணம் என்ற வார்த்தையைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- நான்காம் வாரத்தில் தேவன் யோசுவாவிடம், தேவ வார்த்தையை தியானிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் பலங்கொண்டு திடமனதாயிருக்கும்படி கட்டளையிட்டார். அவன் வலது புறமும் இடதுபுறமும் விலகாது தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்கக் கவனமாயிருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் (யோசுவா 1:7) உண்மையில் கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது செயலில் காட்டுவதுதான். ஆனால் கர்த்தருக்குப் பயப்படாதவர்களுக்கு என்ன நடக்கும்? வெளிப்படுத்தல் 21:8-ஐ பாருங்கள். இரண்டாம் மரணத்தை அடைபவர்களின் அனுபவம் எப்படிப்பட்டதாக இருக்குமென்று விளக்கப்பட்டிருக்கிறது?

- அவர்கள் தப்புவதற்கு வாய்ப்புண்டா? அவர்கள் ஏன் தப்ப முடியவில்லை?

அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது

3. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

4. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

5. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்; இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார், பின்னும்;

அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

6. அன்றியும், அவர் என்னை நோக்கி; ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

7. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான், நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

8. பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

- உங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? உங்களுக்கு எப்படித் தெரியும்?

- உங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படாதிருக்குமானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

- உங்களுயைட பெயர் ஜீவப்புஸ்தகத்தில் இருந்தால், நீங்கள் மரணத்தைக் குறித்துப் பயப்பட வேண்டுமா? விரிவான பதில் எழுதுங்கள்.

- எவ்விதமான பயத்தை நீங்கள் தெரிவு செய்திருக்கிறீர்கள்?

## சுருக்கவுரை

இந்த உண்மைகள் உங்களுக்கே உரியவை என்று அறிந்து கொள்வது உங்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறதா? நீங்கள் தேவனுடைய அனுமதியில்லாமல் மரணமடைய முடியாது என்றும் நீங்கள் அவருக்குச் சொந்தமானவர்களாயிருந்தால், நீங்கள் எப்படிப்பட்ட மரணமடைகிறீர்கள் என்பது முக்கியமல்ல, இந்த உடலிலிருந்து உயிர் பிரியும்போதே தேவனோடு ஐக்கியமாகிவிடுவோம் என்று அறிந்திருக்கிறீர்களா?

இப்படிப்பட்ட அறிவு தேவனுக்குப் பயப்படும் பயத்தில் வாழ்வதற்கு, அவருடைய வார்த்தைகள் உண்மையானது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு, அவரை நம்புவதற்கு, அவரை மதிப்பதற்கு, அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே தொழுவதற்கு உங்களுக்கு உதவி செய்கிறதா? அப்படிச் செய்வதுதான் ஞானமும் வாழ்வுமாகும்.

# வாரம் ஆறு

வாழ்க்கை மிகவும் நிலையில்லாதது. இந்த நிலையில்லாத தன்மை பல நேரங்களில் பயத்தை உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இப்படி நடந்துவிட்டால் என்ன செய்வது என்ற தொடர் கவலைகள் நமக்குள்ளே இருப்பதைக் காணமுடியும். எனக்கு இப்படி ஆகிவிட்டால் என்ன நடக்கும்? எனக்குப் பிரியமானவர்களுக்கு இப்படி நடந்துவிட்டால் என்ன நடக்கும்? நம் பிரட்சனைகளில் இப்படி நடந்துவிட்டால் என்று, நாம் எல்லோருமே நம் சொந்த கோடிட்ட இடத்தை நிரப்பிக் கொள்ளலாம் அல்லவா?

ஆனால், இப்போதிலிருந்து மரணம் வரும் நாட்கள் வரை நம்முடைய வாழ்க்கையில் என்ன நடக்கும் என்ற கவலையிலேயே நாம் வாழவேண்டுமா? எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கலக்கத்தில் வாழ வேண்டுமா? நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது, நாம் எதை அனுபவிக்கிறோம், நமக்கு என்ன சொல்லப்பட்டதோ அது நடக்கப்போகிறது என்பதை நம்முடைய உணர்ச்சிகளுடன் முடிவெடுக்கின்ற, பரபரப்பும் திகிலும் நிறைந்த ரோலர் கோஸ்டர் விளையாட்டில் சிக்கியிருக்கிறோமா?

நாம் நம்முடைய பாடத்தைத் தொடங்கும்போது இயேசு தன்னுடைய சீஷர்களிடத்தில்: "நீங்கள் ஏன் பயப்பட்டீர்கள்?" என்று கேட்ட கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொண்டோம். அதன்பின் தேவன் யார், அவரைப்பற்றிய மற்றும் அவருடைய குமாரனைப் பற்றிய உண்மைகளையும் 'நான் உன்னுடனேகூட இருக்கிறேன்' என்ற அவருடைய வாக்குத்தத்தையும் நாம் விசுவாசித்தபோது நமக்கு நம்பிக்கையைக் கொண்டுவந்தது என்று நாம் பார்த்தோம். நம்முடைய ஒவ்வொரு புயல்காற்றின் சூழலிலும் நம்மோடு இருக்கிறவரை எவ்விதத்தில் அறிந்து கொள்வது மற்றும் நம்புவது என்பதைப்பற்றி இன்னும் கொஞ்சம் ஆழமாகப் படித்தோம்.

நம்முடைய மூன்றாம் வார வேத பாடத்தில், ஒரே பயமான கர்த்தருக்குப் பயப்படும் பயம் மற்ற எல்லா பயங்களையும் ஒன்றுமில்லாமல் செய்து வெற்றிக் கொண்டதைக் குறித்து நாம் பார்த்தோம். நான்காம் வாரத்தில் நம்மை பயப்படுத்தி அடிமைப்படுத்தி வைத்த மனிதனுக்குப் பயப்படும் பயத்தை எவ்வாறு மேற்கொள்வது என்றும் பார்த்தோம். கடந்த வாரத்தில் மரண பயத்தை நாம் எவ்வாறு கையாள்வது என்பதைக் குறித்துப் பார்த்தோம்.

இந்த வாரத்தில் எவ்வாறு ஒரு மனிதன் நிச்சயமற்றதைக் குறித்த பயத்தை வெற்றிகொள்ள முடியும் மற்றும் அனுதின வாழ்க்கையில் கலக்கத்தைக் கொண்டுவரும் பிரச்சனைகளினூடே ஒவ்வொரு வினாடியும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வாழ்வது என்ற நடைமுறைக் கருத்தை காண விரும்புகிறோம். உன்னதமான இடத்தில் வாசம் செய்யும் வாழ்க்கையை நீங்களாகவே கண்டுபிடிப்பதற்கும், ஜீவ ஒளியிலே (யோவான் 8:12) மிகவும் நம்பிக்கையோடு நடப்பதற்கும் தேவன் இதைப் பயன்படுத்துவாராக.

## ஏசாயா 50:10

உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.

## சங்கீதம் 27:1-3

1. கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்?

2. என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.

3. எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம்

## உற்றுநோக்கு

மக்கள் இருளில் வாழவேண்டுமென்று தேவன் ஒருக்காலும் விரும்பவில்லை. இருள் என்ற கருவிலே பயம் உருவாகிறது.

**தலைவர் :** ஏசாயா50:10, சங்கீதம் 27:1-3, மற்றும் யோவான் 8:12 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் தவிர மற்ற **மனிதர்களைக் குறிக்கும்** வார்த்தைகளான எவன், தனக்கு, அவன், தன், என், என்னை, எனக்கு, நான் ஆகிய சொற்களை அடிக்கோடிடட்டும்.
- **'இருட்டிலே', 'இருளிலே'** என்ற வார்த்தைகளுக்கு மேலே ஒரு அரைவட்டத்தை வரையவும். ⌒
- **கர்த்தருக்குப் பயந்து, பயப்படுவேன், அஞ்சுவேன், பயப்படாது** என்ற சொற்களை வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- எவன், தனக்கு, அவன், தன், ஆகிய சொற்களைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? வசனங்களிலுள்ள பலவிதமான சூழ்நிலைகளையும் கவனித்துப் பார்த்து கலந்துரையாடவும்.

- இருளிலிருந்து ஒருவன் எவ்வாறு தப்பித்துக் கொள்கிறான்?

- இது கர்த்தருக்குப் பயந்து நடப்பதற்கு எவ்வகையில் தொடர்புள்ளது?

## உற்றுநோக்கு

தேவன் "முழுக் கண்ணோட்டத்தோடு" தொழுதுகொள்ளப்பட வேண்டும். நம் முழு நம்பிக்கையையும் அவர்மீது மட்டுமே வைக்க வேண்டும். கலிலேயா கடலோரத்தின் அருகில் உள்ள ஒரு சிறு மலைமேலிருந்து இயேசு என்ன கற்றுக்கொடுத்தார் என்பதைக் கவனியுங்கள்.

**தலைவர் :** மத்தேயு 6:22, 24-34 வரை நிதானமாக வாசிக்கவும் குழுவினர் ...

- **உன், ஒருவனாலும், உங்களால், உங்கள், உங்களில், எவன், நீங்கள்** ஆகிய சொற்களை அடிக்கோடிடவும்.

- **'கவலை',** என வருமிடங்களில் வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

### யோவான் 8:12

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

### மத்தேயு 6:22, 24-34

22. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

24. இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

*25. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?*

*26. ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?*

*27. கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?*

*28. உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி*

## கலந்துரையாடு

- உன், ஒருவனாலும், உங்களால், உங்கள், நீங்கள் என்பவற்றைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- 'கவலை', என்பதைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- கவலைப்படுதலைக் குறித்த இந்தக் குறிப்புக்கள் நம்முடைய வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பயங்களுக்கு எவ்வாறு பொருந்துகிறது? உங்களுடைய கருத்துக்களை குழுவிலுள்ள மற்றவர்களிடம பகிர்ந்து கொள்ளுங்கள்.

- வாழ்கையின் இந்தக் கவலைகளுக்கு இயேசு என்ன பதிலைத் தருகிறார்?

வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;

29. என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

30 அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

31. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.

32. இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

33. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

34. ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும், அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.

- மற்ற எல்லாவற்றையும்விட தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நீங்கள் தேவனுக்குப் பயப்படும் பயத்தில் வாழ்கிறீர்கள் என்று பொருளா? உங்களுடைய பதிலை விளக்குங்கள்.

## எபிரெயர் 4:14-16

14. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்.

15. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்,

## உற்றுநோக்கு

பணத்தை அல்ல தேவனை மட்டுமே ஒரே சிந்தையோடு நோக்குவதைக் குறித்து இயேசு தமது சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவதைத் தவிர வாழ்க்கையின் மிக அத்தியாவசிய தேவைகளுக்கும்கூட நாம் கவலைப்படக்கூடாது என்று அவர் அறிவுரை கூறினார். ஆனால் நாம் சந்திக்கும் பிரச்சனைகளை உண்மையில் இயேசு புரிந்திருக்கிறாரா?

**தலைவர் :** எபிரெயர் 4:14-16 வரை வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **நமக்கு, நாம், நம்முடைய, நம்மைப்போல், நமக்கிருக்கிறார்** ஆகியவற்றை அடிக்கோடிடவும்.
- **'இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.

## கலந்துரையாடு

- இயேசுவைக் குறித்த குறிப்புகளைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- நமக்கு, நாம், நம்முடைய என்பனவற்றைக் குறித்ததிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இதை அறிந்திருப்பது இக்கட்டான பயச் சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு உங்களுக்கு எவ்வாறு உதவும்?

## உற்றுநோக்கு

மேசியாவைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னபோது, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை அருளும் ஆவியானவர் இயேசுமேல் தங்கிருப்பார், கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும் (ஏசாயா 11:1-3) என்று குறிப்பிடுகிறார். ஆக, தேவனாகிய இயேசு மாம்சத்திலே மனிதனாக பூமியில் இருந்தபோது எப்படி வாழ்ந்தார்? இந்த அறிவைக்கொண்டு நாம் என்ன செய்யலாம்?

**தலைவர் :** யோவான் 5:30, 14:10, 1 கொரிந்தியர் 11:1, மற்றும் 1 யோவான் 2:6 ஆகிய வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **நான், என், எனக்கு, என்னை, என்னிலும், கிறிஸ்து, அவருக்குள், அவர்** போன்ற இயேசுவைக் குறிப்பிடும் வார்த்தைகளை ✝ சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.

பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

*16.* ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்.

### யோவான் 5:30

இயேசு சொல்லுகிறார்.

நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

### யோவான் 14:10

இயேசு சொல்லுகிறார்.

நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்.

## 1 கொரிந்தியர் 11:1

பவுல் எழுதுகிறார்.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.

## 1 யோவான் 2:6

அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.

## கலந்துரையாடு

- இயேசு வாழ்ந்த விதத்தைக் குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- கர்த்தருக்குப் பயப்படுதல் என்பதின் பொருள் அவரை முழுவதும் நம்புவதும், அவரைக் கனம்பண்ணுவதும், அவர் சொன்ன வார்த்தைகளை விசுவாசிப்பதும், அவைகளுக்குக் கீழ்ப்படிவதும் என்றால் இயேசு தன்னுடைய வாழ்க்கையில் கர்த்தருக்குப் பயப்படுதலை எவ்வாறு செயலில் காட்டினார்?

- தேவனுடைய பிள்ளையாகிய நீங்கள் இவற்றை அறிந்துகொள்வது ஏன் அவசியம்? இதில் உங்களுக்கான பாடம் என்ன இருக்கிறது? உங்களுடைய பதிலை விளக்குங்கள்.

## உற்றுநோக்கு

ஒரு தேவனுடைய பிள்ளையாக உங்கள் வாழ்நாள் முழுவதும் எவ்வாறு வாழவேண்டும்?

**தலைவர் :** எரேமியா 17:5-8, நீதிமொழிகள் 3:5-8 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- 'யாரைப்பற்றிச் சொல்லப்படுகிறதோ' அல்லது 'யாருக்குச் சொல்லப்படுகிறதோ' அவை ஒவ்வொன்றையும் அடிக்கோடிடவும். எனவே **மனுஷன், அவன், தன், உன், உன்னை** ஆகியவற்றை அடிக்கோடிட வேண்டும்.
- **'பயம்', 'பதட்டம்'** போன்ற சொற்களைச் சுற்றி வளைந்து நெளிந்த வட்டமிடவும்.
- **நம்பிக்கை** என்று வருகிற இடங்களிலே ஒரு பெரிய **ந** வை வரையவும்

## கலந்துரையாடு

- எரேமியா 17:5-8-ல், எப்படிப்பட்ட ஒற்றுமைகளும், முரண்பாடுகளும் விவரிக்கப்பட்டுள்ளன?

- எரேமியா 17:5-6-ல் சொல்லப்பட்ட மனிதனைக் குறித்த விளக்கத்திலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

### எரேமியா 17:5-8

5. மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

6. அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்

7. கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

8. அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும் கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித்தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

## நீதிமொழிகள் 3:5-8

5. உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,

6. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

7. நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.

8. அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.

- எரேமியா 17:7-8ல் சொல்லப்படுகிற மனிதனைப் பற்றி என்ன கற்றுக்கொண்டீர்கள். மேலும் மரத்தைப் பற்றிய விளக்கத்திலிருந்தும் என்ன கற்றுக்கொண்டீர்கள்? இது நம்முடைய வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்தும்?

- எந்தெந்த வழிகளில் ''உஷ்ணம்'' (உபத்திரவங்கள், வேதனைகள்) நம்முடைய வாழ்க்கையில் வருகிறது? (எரேமியா 17:8)

- நீதிமொழிகள் 3-ம் அதிகாரத்தில் உன், உன்னை என்பதைக் குறித்ததிலிருந்து என்ன அறிந்துகொண்டீர்கள்?

- இந்த வசனங்களில் கர்த்தருக்குப் பயப்படுதல் எவ்வாறு காணப்படுகிறது?

- கர்த்தருக்குப் பயப்படுவது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்ற நடைமுறை வாழ்க்கைக்கு உகந்த, எந்த கருத்துக்களை இவ்வசனங்கள் உங்களுக்குத் தருகின்றன?

- கர்த்தருக்குப் பயப்படுகிறவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு என்ன நன்மைகள் (பலன்கள்) உண்டாகும்?

## உற்றுநோக்கு

தாவீது தன் எதிரியான அபிமலேக்கின் கையில் அகப்பட்டபோது, அவன் வேம் மாறி பைத்தியக்காரன்போல் நடித்தான் அதனால் விடுவிக்கப்பட்டான். அதன் பின்பு அவன் சங்கீதம் 34-ஐ எழுதினான். நீங்கள் வாழ்க்கையின் பயமான சூழ்நிலைகளை சந்திக்கும்போது அவனுடைய வார்த்தைகள் உங்களுக்கு ஆறுதலைக் கொண்டுவரும். நாம் இப்போது அவனுடைய மாதிரியிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

**தலைவர் :**சங்கீதம் 34:4-19 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **'சங்கீதக்காரனைக்'** குறித்த ஒவ்வொரு குறிப்பையும் மற்றும் தேவனை அடைக்கலமாகக் கொண்ட மனிதனையும் அதாவது நான், எனக்கு அவர்கள், இந்த ஏழை, நம்பிக்கையாயிருக்கிற மனுஷன், பரிசுத்தவான்கள் இன்னும் இதைப்போன்ற சொற்களை அடிக்கோடிடவும்.
- **'பயம்'**, என்கிற சொற்களைச்சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

தலைவர் : இச்சங்கீதத்தை ஒவ்வொரு பகுதியாக (பாகமாக) வாசிக்கவும், சில வசனங்கள் அடிக்கோடிட்டு பிரிக்கப்படுவதை நீங்கள் பார்க்கலாம். இது சங்கீதத்தை நீங்கள் பகுதிகளாகப் பிரித்துக் கலந்துரையாட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் பின்வரும் கேள்விகளைக் கலந்துரையாடவும்.

### சங்கீதம் 34:4-19

4. நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.

5. அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.

6. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

7. கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

8. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவன்.

9. கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்;

*அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.*

*10. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.*

*11. பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள், கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.*

*12. நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?*

*13. உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.*

*14. தீமையைவிட்டு விலகி நன்மைசெய்; சமாதானத்தைத் தேடி, அதைத்தொடர்ந்துகொள்.*

*15. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.*

- கர்த்தரைத் தேடுகிறவர்கள், அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களைக் குறித்து இந்தக் குறிப்பிட்ட வசனங்களிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது என்ன செய்யும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்?

- தேவன் எவ்வாறு பதிலளிக்கிறார்?

**தலைவர் :** முன்னுள்ள கேள்விகளின்படி, எல்லா பகுதிகளுக்கும் பதிலளித்த பின்பு, 19-ம் வசனத்திற்குரிய கேள்விகளையும் கலந்துரையாடுங்கள்.

- வசனம் 19-ல், நீங்கள் என்ன காண்கிறீர்கள்?

- வாழ்க்கையின் பயத்தைக் குறித்து இந்த வசனம் என்ன சொல்லுகிறது? ஏதாவது ஆறுதல்தரக்கூடியது இருக்கிறதா? உங்களுடைய பதிலை விளக்குங்கள்.

அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

16. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

17. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

18. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

19. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

## ஏசாயா 41:10

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

## மல்கியா 3:16-4:3

16. அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.

17. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

## உற்றுநோக்கு

ஆனால் உங்களின் பொறுப்பு என்ன? உங்களுடைய வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகள், கஷ்டங்கள், சோதனைகளின் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? தேவன் உங்களுக்கு எவ்வாறு பதில் தருவார்?

**தலைவர் :** ஏசாயா 41:10, மல்கியா 3:16-4:3 வரை வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- **பயப்படாதே, திகையாதே, பயந்தவர்கள்** போன்ற சொற்களைச் சுற்றி வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

- **தேவன் யாரிடம் பேசுகிறரோ, கர்த்தருக்குப் பயந்தவர்கள் யாரோ** மற்றும் அவர்களைப் பொருள்படுத்தும் சொற்களையும் கவனமாகப் பார்த்து அதையும் அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- ஏசாயா 41:10-ல், தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கூறும் அறிவுரைகள் என்னென்ன? அவர் என்ன காரணத்திற்காகக் கொடுத்தார்?

- ஏசாயா 41:10-ல் உள்ள இந்த வாக்குத்தத்தம் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பயங்களுக்கு எவ்வாறு உதவி செய்யும்?

- நீங்கள் இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு வாழ்வதோடு, இந்த வசனத்தைப் பயன்படுத்தி எவ்வாறு கஷ்டங்களை அனுபவிக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்யமுடியும்?

- கர்த்தருக்குப் பயந்தவர்கள் மற்றும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- கர்த்தருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்கள் என்பதின் பொருளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இதற்கும் தேவனுக்குப் பயப்படும் பயத்திற்கும் தொடர்பு இருக்கிறதா? உங்களுடைய பதிலை விளக்குங்கள்.

ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.

18. அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்.

4:1 இதோ, சூளையைப்போல எரிகிறநாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள், வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

2. ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின்

செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.

3. துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

## பிரசங்கி12:13-14

13. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவெ.

14. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

- பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் இறுதிப் புத்தகமாக மல்கியா இருக்கிறது. இஸ்ரவேல் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டப் பின்பு இது எழுதப்பட்டது. எதிர்காலத்திற்கான எந்த கருத்தை இந்த வசனங்களிலிருந்து நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? தம்முடைய ஜனங்களுக்கான என்ன வாக்குத்தத்தங்கள் மற்றும் திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார்?

## உற்றுநோக்கு

ஆக, இந்த ஆய்வுப்பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்டவைகள் அனைத்திலும் அடிப்படை உண்மை என்ன?

**தலைவர் :**பிரசங்கி 12:13-14 வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- **'தேவன்'** மற்றும் அவரைக் குறிக்கும் சொற்களை முக்கோணத்தால் குறிக்கவும்.

- **'தேவனுக்குப் பயந்து'** என்கிற இடத்தில் வளைந்து நெளிந்த கோடுகளால் வட்டமிடவும்.

## கலந்துரையாடு

- யார் கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்?

- ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

- நீங்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் குறித்து கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் உங்கள் தேசத்தின் மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்குவார்களானால் என்ன நடக்கும்? எந்தெந்த இருளான காரியங்களை அது மறையச் செய்யும்?

- நம்முடைய சமுதாயத்தை நீங்கள் பார்க்கும்போது, மக்கள் தேவனுக்குப் பயப்படவும், தங்களை தேவன் எவ்விதமாக இருக்க வேண்டுமென்று படைத்தாரோ அதை அறிந்து கொள்ளவும், அவருடைய சமாதானத்தை அறிந்து கொள்ளவும் வேண்டியது அவசியமாயிருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

- நீங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறவரானால் இதில் உங்களுக்கு உள்ள பொறுப்பு என்ன? கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்னவென்பதைக் கற்றுக்கொண்ட நீங்கள், தேவையுள்ள ஒருவர் அதைக் கேட்பதற்கு வழி நடத்தும்படி தேவனை நோக்கி நீங்கள் ஏன் ஜெபிக்கக் கூடாது?

## சுருக்கவுரை

“கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும்... உண்டாக்கப்பட்டது; அவர் சொல்ல ஆகும்...” (சங்கீதம் 33:6,9) என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. ஆகையினாலே “பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக, உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக (சங்கீதம் 33:8).

ஆனால் அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவதேயில்லை, அல்லவா?

இதற்கு காரணம் மக்கள் தங்களைப் படைத்த தேவனை அறிந்து கொள்ளவில்லை அல்லது பயப்படவில்லை, அவர்கள் தேவனை தேவனாகவே மதிப்பதில்லை, பூமியில் பிரச்சனைகள் இருக்கின்றன. தேவனைக் குறித்த அறிவையும், ஆதாரத்தையும் தொடர்ந்து வெறுத்து ஒதுக்குவதினாலும் மனிதர்களிடத்திலே இருளின் அதிகாரம் பெருகிவிட்டிருக்கிறது. இந்த இருளானது பயத்தை அதிகமாக்குகிறது.

இருள் என்ற கருவிலிருந்த பயம் பிறக்கிறது. ஆனால் தேவனிடத்திலோ கொஞ்சமேனும் இருளில்லை, தேவன் ஒளியாயிருக்கிறார். தேவன் அன்பாயிருக்கிறார். அவர் நம்மீது வைத்திருக்கிற மிகுந்த அன்பினாலே தன்னுடைய சொந்த குமாரனை மனிதனிடம் அனுப்பினார், வார்த்தையானவர் மாம்சமான மனிதனாகவும், வாழ்வின் ஒளியுமானார், இதனால் கர்த்தருக்குப் பயப்படுதல் என்னவென்பதை நமக்கு நாமே கண்டுகொள்ள முடியும்.

ஏசாயா எழுதினார், இயேசு அதை நிறைவேற்றினார்: “ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும் (ஏசாயா 11:2-3).

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் நடப்பதென்பது இயேசு வாழ்ந்த வாழ்க்கையை வாழ்வதுதான், அதாவது நம் சொந்த விருப்பத்தின்படி செய்யாது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதும் அவருடைய வேலையைச் செய்வதுமாகும். கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது அவரை நம்புவதாகும். கர்த்தரைக் கனம் பண்ணுதல் என்பது தேவன் தாம் என்று சொல்லுகிறாரோ அவரே என்றும், அவர் செய்வேன் என்று எதைச் சொல்லுகிறாரோ அதை அவர் செய்து முடிப்பார் என்று விசுவாசிப்பதும் ஆகும். ஏசாயா 50:10-ல் நாம் படித்ததை

நினைவுக்குக் கொண்டு வருவோம்: "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.'

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின், புத்தியின் ஆரம்பம் என்று உங்களுக்கு நீங்களே பார்த்திருக்கிறீர்கள். இது தேவன் யோசுவாவுக்கு வாக்குப்பண்ணினது போல எல்லா பயத்தின் பிடியிலிருந்தும் நம்மை விடுவித்து வெற்றி வாழ்க்கை வாழ வழிவகுக்கிறது. வெற்றி என்பது பலங்கொண்டு திடமனதாயிருப்பதாகும். இதனால் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உங்களை வலது மற்றும் இடதுபுறமாக விலகுவதற்குப் பதிலாக, உங்களை குறுகலான நேர் வழியிலே நித்திய ஜீவனுக்கு வழி நடத்தும். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளுதலிலிருந்து வருகிறது, அதை தியானித்து உங்களுடைய வாழ்க்கையின் அங்கத்தில் ஊடுருவ அனுமதிக்கும்போது உங்களுக்குள் பின்னிப்பிணைந்து, வார்த்தையின்படி வாழ்வதற்கு அது உங்களை நிர்பந்தப்படுத்தும். கர்த்தருக்குப் பயப்படும் பயம், அவர் சொன்ன அனைத்துக் கட்டளைகளையும் நிறைவேற்றும்படி உங்களைத் தூண்டும்.

*கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு*

*(சங்கீதம் 19:8-11).*

உங்களைக் கட்டிவைக்கிற பயங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான பதில் இதோ இங்கே இருக்கிறது: "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது, (சங்கீதம் 25:14).

இந்த பயமே எல்லா பயத்திலிருந்தும் வெற்றியைத் தருகிறது.

## ஆசிரியர் மற்றும் இந்த ஊழியங்களைக் குறித்து

கே ஆர்தர் ஒரு சர்வதேச வேத போதகராக, ஆசிரியராக, கருத்தரங்கு பேச்சாளராக உலக முழுவதிலும் அறியப்பட்டுள்ளார். மேலும் 'பிரீசெப்ட் ஃபார் லைப்' என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலக முழவதிலும் சந்தித்துள்ளார். நான்கு முறை 'தங்க பதக்க விருதின்' ஆசிரியராகவும், 100 -க்கும் மேற்பட்ட புத்தககங்கள் , மற்றும் வேத பாடங்களுக்கு ஆசிரியராகவும் உள்ளார்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேனல் (PMI), 1970 -ல் கே மற்றும் அவர் கணவர் ஜேக் என்பவர்களால் சாட்டனூகா, டென்னிஸியி -ல் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டவேண்டும் என்ற தரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த ஊழியம் உலகமுழவதும் சென்று அடைந்துள்ளது. இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகுழுக்களை அமெரிக்கா முழுவதும் கொண்டுள்ளது. PMI ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்து மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டு கொள்ள பயிற்றுவித்துள்ளது.

உங்கள் பகுதியில் வேதத்தை பகுத்தாராயும் (Inductive Bible Study) பயிற்சிகளுக்கான கூடுதல் விவரங்களுக்கு பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா -ஐ தொடர்புகொள்ளவும்.

**Precept Ministries Society of India**
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092, India
Tel.No: +91-22-65333302
E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

40 MINUTE BIBLE STUDIES

# No-Homework Bible Studies

## That Help You Discover Truth For Yourself



















***Books available in English, Hindi, Punjabi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.***

*For Full Product Catalogue and Orders Contact:*

***preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com***

***www.preceptindia.org***

40 MINUTE BIBLE STUDIES

# No-Homework

## That Help You



























# Bible Studies

## Discover Truth For Yourself



























# Other powerful study series

## New Inducive Study Series

A big picture study, the NISS is ideal for personal study, small groups, Sunday school classes and discipling.










## Bible Study for Kids

The Discover 4 Yourself Inductive Bible Studies for Kids help you find out for Yourself what the Bible is all about - and give you exciting ways to do it!






## Devotional & Study Tools













## Precept Upon Precept

Our most intensive Inductive Study series.










***Books available in English, Hindi, Punjabi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.***

*For Full Product Catalogue and Orders Contact:*
***preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com***
***www.preceptindia.org***



## பயத்தின் சங்கிலியை உடைத்தெறிதல்

வாழ்க்கை எல்லாவித பயங்களாலும் நிறைந்திருக்கிறது. இந்த பயம் நம்முடைய சிந்தையை உருத்தெரியாமல் அழித்துவிடும், உங்களுடைய ஆத்துமாவை துயரத்தில் ஆழ்த்தி விடும், சொல்லமுடியாத மன அழுத்தத்தை கொண்டுவரும். ஆனால் இந்த பயங்களுக்கெல்லாம் அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டிய அவசியமில்லை.

இந்த 6 வார வேத பாடத்தில் நீங்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வாழும்போது, உங்கள் எல்லாச் சூழ்நிலையின் பயங்களையும், பலத்தோடும் திடநம்பிக்கையோடும் எதிர்கொள்வது எவ்வாறு என்பதை கற்றுக்கொள்வீர்கள். கர்த்தருக்குப் பயப்படும் பயம், மற்ற பயங்கள் ஒவ்வொன்றையும் வெற்றி கொண்டு உங்களை விடுவித்து விசுவாசத்தில் வாழச்செய்யும்.

40 நிமிட வேத பாடம்

### ஒரு வாரத்தில் 40 நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடும்!

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் குழுவினரின் இந்த 40 நிமிட வேதபாட தொடரானது, உங்களை முக்கியமான தலைப்புகளில் ஊக்கத்துடன் செயல்படவைக்கிறது. இந்த பகுத்தாராயும் முறை வழிகாட்டியானது, வீட்டுப்பாடங்கள் இல்லாமல் வெறும் 40 நிமிடங்களில் முடிக்கக்கூடிய 6 பாடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்களாகவே ஆராயும்படி தேவன் என்ன சொல்லுகிறார் மற்றும் எப்படி உங்கள் இன்றைய வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடும் என்றும் உங்களுக்கு உதவிடுகிறது. புத்தகத்தின் வலதுபுறத்தில் அதன் குறிப்பிட்ட வேத வசனங்களுடன் நடத்துபவரின் குறிப்புகளும் உள்ளது, சுயமாகக் கற்கும் ஒவ்வொரு பாடங்களும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சிறுகுழு கலந்துரையாடலுக்கும் ஒரு வல்லமையான மூலாதாரமாகும்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல், 1970 -ல் ஜேக் மற்றும் கே ஆர்தரால் ஆரம்பிக்கப்பட்டது, இலட்சக்கனக்கான மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டுகொள்ள பயிற்றுவித்துள்ளார்கள். **Precepts for Life** என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலகமுழுவதும் சந்தித்துள்ளார்கள். இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிற்சி பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் அமெரிக்கா முழுதும் கொண்டுள்ளது. **PMI** ஏறக்குறைய 180 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்துள்ளது.

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org